# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மார்ச் 2010 ஜீவியம் 15 மலர் 11**

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி ..... 2
அன்பர் கடிதம் ..... 3
தவறான அபிப்பிராயங்களும் உண்மையான நிலைப்பாடுகளும் ..... 5
லைப் டிவைன் ..... 14
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ..... 28
குரு வந்தனம் ..... 37
அஜெண்டா ..... 39
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ..... 42
பகுதியான அறிவு முழுமை பெற ஞானமாவது ..... 43
சாவித்ரி ..... 49
யோக வாழ்க்கை விளக்கம் V ..... 51
பூரணயோகம் - முதல் வாயில்கள் ..... 57
திட்டு = தங்கச் சங்கிலி ..... 59

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

### ஜீவியத்தின் ஓசை

**பிரம்மம் மனித வாழ்வில் எட்டிப் பார்ப்பதை நாம் தற்செயல் தெய்வச் செயல் என்கிறோம்.**

**உள்ளே சுயநலமும் வெளியே நல்ல பழக்கமும் ஆன்மீகப் பலன் தாராது.**

**எச்சரிக்கையை மதிப்பவருக்கு வாழ்க்கையில் தவறு நடப்பதில்லை. எச்சரிக்கையைப் புறக்கணிக்கும் பொழுதுதான் தவறு நடக்கிறது.**

**கோவிலில் இருக்கும்பொழுதே கடவுள் நினைவில் வருவதில்லை. அழைப்பில் ஈடுபடும் அன்றுகூட பேச்சை சமர்ப்பணம் செய்யத் தோன்றுவதில்லை.**

## இம்மாதச் செய்தி

**ஆத்மா**

**சட்டத்திற்கு உட்படாது.**

**ஆத்மாவுக்குக்**

**கட்டுப்பட்ட மனிதனைச்**

**சட்டம் கட்டுப்படுத்தாது.**



## அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*
*ஓம் அனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

அன்னை அவர்களின் சமூகத்திற்கு அநேக கோடி நமஸ்காரங்கள். என் பெயர் கிறிஸ்டி. நான் என் தோழி பேபி (Baby) மூலம் அன்னையை அறிந்து 2 ஆண்டுகள் ஆகின்றன. அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து நான் செய்த செயல்கள் அனைத்திலும் எனக்கு மிகப்பெரிய வெற்றியே கிடைத்தது. நான் இங்கு முக்கிய சம்பவத்தை பகிர்ந்துகொள்கின்றேன். திண்டுக்கல்லில் உள்ள தியான மையத்திற்கு நானும் என் ஒரே மகனும் தியானத்திற்குச் சென்று பிரார்த்தனை செய்வோம். என் மகன் அன்னையின் அருளால் நன்றாகப் பயன் அடைந்திருக்கின்றான்.

நான் நர்ஸாக (Nurse) பணிபுரிகின்றேன். 15/04/2009 தேதி என் பணியை முடித்துவிட்டு வீட்டிற்குச் செல்லும்போது இரண்டு திருடர்கள் என் கழுத்தில் உள்ள தாலிச் செயின் 5 பவுனை என்னை அடித்துவிட்டுப் பறித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அவர்கள் பறித்துச் செல்லும்போது நான் என் அன்னையைத்தான் அழைத்தேன். அப்போது என்னுடன் பணிபுரிபவர்கள் நீங்கள் புதியதாக அன்னையை வணங்குவதால்தான் உங்கள் செயினை பறித்து-விட்டார்கள்என்று கூறினார்கள். நான் அவர்களிடம், அப்படிச் சொல்லாதீர்கள். என் அன்னையின்மேல் எனக்கு அதிகமான நம்பிக்கை இருக்கிறது. எனக்கு என் அம்மா அதைக் கண்டுபிடித்துக் கொடுத்துவிடுவார்கள்என்று கூறினேன். அதுபோல எனக்கு 13.07.2009 தேதியன்று என் நகை கிடைத்துவிட்டது. எனக்கு நகை கிடைத்தது அன்னையின் அருளால்தான். நானும் என் மகனும் என்றும் அன்னையின் அருளுக்குப் பாத்திரமாக இருக்கவேண்டும். அன்னையிடம் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டே இருக்கின்றேன்.

அன்னையை நம்பியவர் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. இதை நான் எல்லோரிடமும் தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஸ்ரீ அன்னையை எனக்கு நன்கு அறிய வைத்த ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கும் கடமைப்பட்டிருக்கிறேன். திண்டுக்கல் தியான மையத்தில் பணிபுரிபவர்களுக்கும் நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்னைக்கு என் பல கோடி வணக்கங்கள். நன்றி

-- *கிறிஸ்டி, எரியோடு.*

❀ ❀ ❀


**MALARNDHA JIVIYAM**
Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Pondicherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Integra, 51, II cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 12, I Cross, Venkata Nagar, Pondicherry 605 011. |
| 5. | Editor's Name | : | **N. Asokan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 5, Puduvai Sivam St., Venkata Nagar Extn., Pondicherry 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,** 5, Puduvai Sivam St., Venkata Nagar Extn., Pondicherry 605 011. |

I, (**P.V.Balakrishnan**) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

**sd..................................**
**(P.V. BALAKRISHNAN)**
Date : 01-03-2010 Signature of the Publisher.




# தவறான அபிப்பிராயங்களும் உண்மையான நிலைப்பாடுகளும்

N. அசோகன்

| வ. எண் | தவறான அபிப்பிராயங்கள் | வ. எண் | உண்மையான நிலைப்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | முன்னேற்றத்திற்கு பணம்தான் முக்கியக் கருவி. | 1. | பணம் முக்கியக் கருவியில்லை. முன்னேற வேண்டும்என்ற ஆர்வம்தான் முன்னேற்றத்திற்கு முக்கியக் கருவி. |
| 2. | சிவப்பான தோற்றமுடைய பெண் அழகான பெண். | 2. | தோலின் நிறம் மட்டும் அழகை நிர்ணயிப்பதில்லை. முக லட்சணமும் முக்கியம். சிவப்பான நிறம் கொண்ட பெண்ணிற்கு முக லட்சணம் குறைவாகவும், கருமையான நிறம் கொண்ட பெண்ணிற்கு முகம் லட்சணமாகவும் இருக்கலாம். |
| 3. | பட்டம் அறிவிற்கு அறிகுறி. உயர்ந்த பட்டம் வாங்கி இருந்தால் உயர்ந்த அறிவு இருப்பதாக அர்த்தம். வெளித் தோற்றமும், உள்சாரமும் என்றுமே ஒத்திருக்கும். | 3. | பட்டமும், அறிவும் இரண்டும் ஒன்றில்லை. அம்மாதிரியே தோற்றமும், சாரமும் ஒன்றில்லை. சாரம் இல்லாமல் தோற்றம் அமையலாம். அதுபோலவே தோற்றம் இல்லாமல் சாரமும் அமையலாம். |
| 4. | இனிய பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள் நல்லவர்கள். | 4. | இனிய பழக்கவழக்கங்களைமட்டும் வைத்து ஒருவர் நல்லவர்என்று சொல்ல முடியாது. தீய குணம் படைத்த ஒருவர் போலியாக நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொண்டு தம் தீய குணத்தை மறைக்கலாம். |
| 5. | கணவனும், மனைவியும் சமமாகப் பழகலாம். | 5. | நடைமுறையில் இப்படிச் சமமாகப் பழகுவது கடினம். ஒருவர் அதிகாரம் செய்ய மற்றவர் பணிந்து போவதுதான் வழக்கம். |

| | | | |
|---|---|---|---|
| 6. | பொய்மை நிறைந்த இந்த உலகத்தில் உண்மையாக வாழ்தல் கடினம். | 6. | அன்னை பக்தராக இருப்பவர் உண்மையை அடிப்படையாக வைத்து வாழ்ந்து, வாழ்க்கையில் வெற்றி பெறலாம். |
| 7. | பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுத்தால் அவர்கள் கெட்டுப் போய்விடுவார்கள். | 7. | சுதந்திரமான சூழலில் வளரும்போதுதான் குழந்தைகளுடைய பர்ஸனாலிட்டி மலர்கிறது. |
| 8. | நமக்கு வேண்டியதை நாம் கேட்கும் பொழுதுதான் அவை நமக்குக் கிடைக்கின்றன. | 8. | நாம் மௌன சக்தியைக் கடைப்பிடிக்கும்பொழுது நாம் கேட்டுப் பெறுவதைவிட நமக்கு அதிகமாகக் கிடைக்கும். |
| 9. | பண பலமும், பதவி பலமும் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவை நமக்கு எதையும் பெற்றுத் தரும். | 9. | இவை எதுவும் செயல்படாத நேரங்கள் உண்டு. அப்பொழுது அருளால்மட்டுமே நமக்கு உதவ முடியும். |
| 10. | அதிகாரத்தைப் பயன்படுத்தினால்-தான் வேலை வாங்க முடியும். | 10. | அதிகாரத்தைச் செலுத்தாமலேயே அன்பான தலைமையை வெளிப்படுத்தியே அதிக வேலை வாங்க முடியும். |
| 11. | செல்வ வளம் சந்தோஷத்தைப் பெற்றுத்தரும். | 11. | செல்வ வளம் வசதியைப் பெற்றுத் தருமேயொழிய சந்தோஷத்திற்கு உத்திரவாதம் கொடுக்க முடியாது. |
| 12. | ஒருவர் அவருடைய வாழ்க்கை இலட்சியத்தை எட்டிய பின்பு ஓய்வெடுத்துக் கொள்ளலாம். | 12. | வாழ்க்கை எவரையும் ஓய்வெடுத்துக் கொள்ள அனுமதிப்பதில்லை. ஒன்று நாம் முன்னேறிக்கொண்டிருக்கலாம் அல்லது கீழே போய்க் கொண்டிருக்கலாம். |
| 13. | வாழ்க்கை பாதுகாப்பை நாடுகிறது. | 13. | பாதுகாப்பைவிட துணிச்சலாக சாகசம் புரிவதையே வாழ்க்கை நாடுகிறது. |



| | | | |
|---|---|---|---|
| 14. | எப்பொழுதும் எல்லோருக்கும் உதவி செய்வது நல்லது. | 14. | தராதரம் பார்த்து நாம் உதவி செய்ய வேண்டும். உதவி பெறுபவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை வருவதால் அதன் விளைவாக உதவி செய்பவர்களுக்கே தீங்கு செய்யும் அளவிற்குப் பண்பாடற்ற மனநிலையில் பலர் உள்ளதால் தராதரம் பார்த்துதான் உதவி செய்ய வேண்டும். |
| 15. | பணத்திற்கு முதலிடம். மற்ற எல்லாவற்றிற்கும் இரண்டாவது இடம். | 15. | மனிதர்களுக்கு முதலிடம். மற்ற எல்லாவற்றிற்கும் இரண்டாவது இடம். |
| 16. | முயற்சியின் தொடக்கத்தில் கெட்ட சகுனங்கள் வந்தால் வேலை கெட்டுவிடும். | 16. | சகுனங்கள் வெறும் அறிகுறிகள்தான். நம்முடைய மனோபாவங்களை மாற்றிக் கொண்டால் தோல்வியைத் தவிர்க்கலாம். |
| 17. | ஆண்கள்தான் பெண்களைத் தேடுகிறார்கள். | 17. | பெண்கள்தான் பெரும்பாலும் முதலில் ஆடவர்களின் கவனத்தைக் கவர்ந்து இழுக்கும் வண்ணம் செயல்படுகிறார்கள் என்பதும் உண்மை. |
| 18. | வாழ்க்கையில் சரிவு நிகழ்ந்துவிட்டால் மீண்டும் எழுவது கடினம். | 18. | அன்னை பக்தர்களுக்கு போதுமான நம்பிக்கை இருந்தால் சரிவிலிருந்து மீண்டு மற்றவர்களையும் குறுகிய காலத்தில் தாண்டியே செல்லலாம். |
| 19. | நம்மைச் சுற்றி உள்ளவர்களை சந்தோஷப்-படுத்தினால் அவர்களுடைய அன்பும், ஆதரவும் கிடைக்கும். | 19. | மனிதனுடைய ஆசைக்கு அளவில்லை. ஆகையால் யாரையும் பூரணமாக திருப்திபடுத்த முடியாது. |
| 20. | சரளமாக ஆங்கிலம் பேசுவது புத்திசாலிதனத்திற்கு அறிகுறியாகும். | 20. | சரளமாக ஆங்கிலம் பேசுவது மொழித் திறமையைக் காட்டுகிறதே தவிர புத்திசாலித்தனத்திற்கு அடையாளம் என்று வைத்துக்கொள்ள முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| 21. | புலன்கள் வழங்கும் அறிவு சரியானது. அதுவே இறுதியானதும்கூட. | 21. | புலனறிவு முதல் அனுபவமேதவிர, அதுவே இறுதியானதில்லை. பகுத்தறிவாலும், உள்ளெழுச்சியாலும் உணர்த்தப்படும் அறிவு புலன்கள் தெரிவிப்பதைவிட வேறுபட்டிருக்கும். |
| 22. | வாழ்க்கையில் குறுக்கு வழிகளில் வேகமாக முன்னேறலாம். | 22. | குறுக்கு வழிகளில் கிடைக்கின்ற ஆதாயம் தற்காலிகமானதுதான். நீண்ட காலக் கண்ணோட்டத்தில் பார்த்தால் குறுகிய வழியில் செல்பவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகத்தானுள்ளது. |
| 23. | சமூகத்தில் நிலவும் அபிப்பிராயங்-களுக்கும், பண்புகளுக்கும் ஏற்றபடி ஒத்துப்போவது நல்லது. | 23. | சமூகப் பண்பாடுகளோடு ஒத்துப் போவதில் நாம் சமூகத்தோடு சுமுகமாக இருக்கலாம். ஆனால் ஏதேனும் புதியதாகச் சாதிக்க வேண்டும்என்று விரும்பினால் சமூகத்தோடு ஒத்துப் போகின்றவர்களால் அது முடியாது. அவ்வகையில் சமூகத்தோடு ஒத்துப் போவது முன்னோடிகளுக்கு நல்லதில்லை. |
| 24. | நமக்குக் கிடைக்கின்ற இயற்கை வளங்கள்தான் நம் முன்னேற்றத்தை நிர்ணயிக்கின்றன. | 24. | நமக்குள் இருக்கும் திறமைகள் இயற்கை வளங்களைவிட உயர்ந்தவை. இயற்கை வளங்களின் குறைபாட்டை மனித வளங்கள் ஈடு செய்யும். எவ்வளவு இயற்கை வளங்கள் இருந்தாலும், அவற்றைப் பயன்படுத்தும் திறமை இல்லாதபட்சத்தில் அவை வீணாகும். |



| | | | |
|---|---|---|---|
| 25. | நமக்கு வேண்டியவற்றை நாம் எவ்வளவு தீவிரமாகத் தேடுகிறோமோ அவ்வளவு வேகமாக அவை நமக்குக் கிடைக்கும். | 25. | பணத்தையோ, பதவியையோ, வாழ்க்கைத் துணையையோ நாம் தேடிப் போகவேண்டியதில்லை. நம்முடைய உள்மனோ பலம் உயர்ந்திருந்தால் மேற்-சொன்னவைகள் தானே நம்மைத் தேடிவரும். உள்ளே தகுதியை வளர்த்துக்கொள்ளாமல் வெளியே இவற்றைத் தேடினால் நாம் எவ்வளவு தேடுகிறோமோ அந்த அளவிற்கு அவை விலகித்தான் போகும். |
| 26. | சிரமங்களும், நெருக்கடிகளும் தவிர்க்கப்பட வேண்டும். | 26. | சிரமத்தின் மூலம் வாழ்க்கை நமக்கு என்ன பாடத்தை வழங்குகிறதோ அந்தப் பாடத்தை நாம் கற்றுக் கொண்டால் சிரமமாக வந்தது வாய்ப்பாக மாறிவிடும். நெருக்கடிகள் வருவதன்மூலம் நம் முன்னேற்றம் விரைவுப்படுத்தப்படுகிறது என்பதும் உண்மை. |
| 27. | வரம்புக்குட்பட்டதும் வரம்பைக் கடந்ததும் இரண்டுமே நேர் எதிரானவை. வரம்பற்றது வேண்டுமென்றால் வரம்புக்குட்பட்டதை விட்டுவிட்டு வரம்பற்றதை நாட வேண்டும். | 27. | வரம்புக்குட்பட்டதையே நாம் சரியாகக் கையாண்டால் அதற்குள்ளிருந்தே வரம்பற்றது வெளிவரும். |
| 28. | சுறுசுறுப்பாக இருப்பவர்கள் சும்மா இருப்பவர்களைவிட அதிகம் சாதிக்கிறார்கள். | 28. | பிஸியாக இருப்பதால் சாதிக்கிறார்கள்என்று அர்த்தமில்லை. அர்த்தமில்லாத விஷயங்களை செய்துகொண்டுகூட ஒருவர் பிஸியாக இருக்கலாம். இப்படி அர்த்தம் இல்லாமல் ஓடியாடிக் கொண்டு இருப்பவரைவிட அமைதியாக ஓரிடத்தில் உட்கார்ந்து திட்டமிட்டபடி வேலை செய்பவர் அதிகமாகச் சாதிப்பார். |

| | | | |
|---|---|---|---|
| 29. | விஞ்ஞானிகள் எதையும் சரியாகப் புரிந்துகொள்வார்கள். அதாவது அவர்கள் செயல்பாடு அறிவுரீதியாக இருக்கும். | 29. | விஞ்ஞானிகள்கூட துறையில் பெயர் எடுத்தவர்கள் சொன்னால்தான் புதிய கருத்தை ஏற்றுக்கொள்வார்கள். பெயர் எடுக்காதவர் சொல்வது உண்மை என்றாலும் அவருக்கு அந்தஸ்து இல்லைஎன்று சொல்வதை ஏற்பதில்லை. இது அறிவுரீதியான செயல்பாடே இல்லை. |
| 30. | நமக்குப் பிடித்தவர்களை நாம் நல்லவர்கள் என்கிறோம். நமக்குப் பிடிக்காதவர்களை நாம் கெட்டவர்கள் என்கிறோம். | 30. | ஒருவர் நல்லவரா, கெட்டவரா என்பது நம் விருப்பு, வெறுப்பைப் பொறுத்ததில்லை. நல்லவர்கள் மேல் நாம் பிரியம் வைக்க கற்றுக்கொள்ள வேண்டுமே தவிர நமக்குப் பிடித்தவர்களை நல்லவர்கள்என்று பேசக்கூடாது. |
| 31. | நம்முடைய பகுத்தறிவுதான் நமக்குக் கிடைத்துள்ள மிகச்சிறந்த கருவி. | 31. | நம்முடைய பகுத்தறிவைவிட நமக்குள் இருக்கும் உள்ளெழுச்சித் திறன் பல மடங்கு உயர்ந்தது. |
| 32. | நாம் தேர்ந்தெடுக்கின்ற அரசியல் தலைவர்களுக்கு நாம் அடிபணிய வேண்டும். | 32. | மக்கள் தருகின்ற அதிகாரத்தால்தான் அரசியல்வாதிகள் தலை எடுக்கிறார்கள். ஆகவே மக்கள் அதிகாரத்திற்குத் தலைவர்கள்தான் கட்டுப்பட வேண்டும். |
| 33. | வெளிநாட்டிலிருந்து பெறப்படும் நிதி உதவி முன்னேற்றத்தை விரைவுபடுத்தும். | 33. | அப்படிக் கிடைக்கின்ற நிதிஉதவி சுய முயற்சியைக் கெடுப்பதால் அது முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தும். |
| 34. | முன்னேற்றம் படிப்படியாகத்தான் வரும். | 34. | அப்படி, படிப்படியாகத்தான் வருமென்று வாழ்க்கையில் விதிமுறை ஒன்றுமில்லை. போதுமான முயற்சியும், அருளின் ஆதரவும் இருந்தால் முன்னேற்றம் வேகமாகவும் பல மடங்கு அதிகமாகவும் வரும். |



| | | | |
|---|---|---|---|
| 35. | பணமும், அதிகாரமும் மக்களைக் கெடுக்கும். | 35. | பணமும், அதிகாரமும் இயற்கையிலேயே கெட்டவை இல்லை. மனிதனுடைய அகந்தைதான் இவற்றைத் தவறாகப் பயன்படுத்துகிறது. |
| 36. | சில சமூகத்தினரும், சில ஜாதியைச் சேர்ந்தவரும் இயற்கையிலேயே மற்றவரைவிட அறிவில் சிறந்தவர். அதனால்தான் அவர்கள் மற்ற சமூகத்தினரைவிட அதிகமாக முன்னேறி இருக்கிறார்கள். | 36. | அப்படி யாரும் இயற்கையில் உயர்ந்த அறிவு கொண்டவர்கள் இல்லை. முயற்சி எடுத்துதான் அறிவை வளர்க்க வேண்டும். பின்தங்கிய சமூகத்தினர் எவரும் இப்படி அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டிய போதுமான முயற்சி எடுத்தால் முன்னேறிய சமூகத்தினருக்கு இணையாக இவருடைய அறிவையும் வளர்த்துக்கொள்ளலாம். |
| 37. | நல்லவர்கள் வாழ்வில் முன்னேற வேண்டும். கெட்டவர்கள் சீரழிய வேண்டும். | 37. | வாழ்க்கை நியாய தர்மங்களுக்குக் கட்டுப்படாதது. ஆகையால் நன்னடத்தைக்கு எப்பொழுதுமே வெற்றி கிடைக்கும் என்பதில்லை. வலிமையும், திறமையும் உள்ளவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். வலிமையும், திறமையும் குறைந்தவர்கள் வாழ்க்கையில் தோல்வி பெறுகிறார்கள். |
| 38. | வாழ்க்கையில் வெற்றி கிடைத்துவிட்டது என்றால் அதை சமாளிப்பது சுலபம். | 38. | சிரமங்களைச் சமாளிப்பதைவிட வெற்றியை சமாளிப்பதுதான் கடினம். |
| 39. | வெற்றி கிடைத்தது என்றால் அதை நாம் கொண்டாட வேண்டும். | 39. | கொண்டாட்டங்களைக் குறைத்தோம் என்றால், நம்முடைய எனர்ஜி சேகரமாகி, நாம் மேலும் சாதிக்க உதவும். |
| 40. | நாம் பெறுவதன் மூலம் வளர முடியும். கொடுத்தால் நமக்குக் குறையும். வாழ்க்கை வரம்பிற்குட்பட்டதாக இருப்பதால் இம்மாதிரி நேரிடுகிறது. | 40. | வாழ்க்கை உண்மையில் வரம்பற்றது. வரம்பற்றதன் விதிமுறைகளின்படி பார்த்தால் நாம் எந்தளவிற்கு மற்றவர்களுக்குக் கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு நமக்கு வளர்ச்சி வரும். |

| | | | |
|---|---|---|---|
| 41. | நாத்திகவாதிகளும், மத நம்பிக்கை இல்லாதவர்களும் கடவுளைவிட்டு விலகி நிற்கிறார்கள். | 41. | உண்மையைத் தேடுகின்றபட்சத்தில் அவர்களும் ஆண்டவனுக்கு நெருக்கமாக இருப்பதாகத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். |
| 42. | நம்முடைய சொந்தச் செயல்பாடுகளுக்கு மட்டும்தான் நாம் பொறுப்பு ஏற்க வேண்டும். இல்லாவிடில் நமக்கு அனாவசிய தொந்தரவு வரும். | 42. | தன்னைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கைக்குப் பொறுப்பு ஏற்பவர்களுக்குத் தன்னை மட்டும் கருதுபவர்களைவிட மன விசாலம் அதிகமாக இருப்பதால் இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையில் அதிகமாகச் சாதிப்பார்கள். |
| 43. | தமக்கு வரும் சிரமங்களிலிருந்து மக்கள் சரியான பாடங்களைக் கற்றுக் கொள்வதால் செய்த தவற்றை திரும்பச் செய்வதில்லை. | 43. | சிரமங்கள் வழங்கும் வாழ்க்கைப் பாடங்களைப் பலபேர் சரியாகக் கற்றுக் கொள்வதில்லை. ஆகவே செய்த தவற்றையே திரும்பவும் செய்கிறார்கள். |
| 44. | மனிதன் பகுத்தறிவோடு செயல்படுபவன். | 44. | மனிதனுக்குப் பகுத்தறிவு இருந்தாலும் அவன் பகுத்தறிவோடு செயல்படுவது இல்லை. பெரும்பாலானவர்கள் அவர்களுடைய உணர்ச்சிகளின் அடிப்படையில்தான் செயல்படுகிறார்களேதவிர அறிவுபூர்வமான செயல்பாடுஎன்பது இரண்டாம்பட்சம் ஆகும். |
| 45. | நம்முடைய பணத்தின் மதிப்புக் குறைவதால் பணவீக்கம் கெட்டதாகும். | 45. | பணவீக்கம்என்பது முன்னேற்றத்தினுடைய ஓர் அறிகுறியாகும். ஆகவே, இரண்டும் சேர்ந்துதான் வரும். ஆகவே ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. |
| 46. | வெற்றியும், தோல்வியும் நம்முடைய வாழ்க்கையில் மாறி மாறித்தான் வரும். | 46. | சாதிப்பதற்கான விதிமுறைகளை அறிந்தவர்களுக்குத் தொடர்ந்து இடையறாத வெற்றி சாத்தியம். |



| | | | |
|---|---|---|---|
| 47. | வாழ்க்கையில் முக்கிய விஷயங்களைக் கவனித்துக் கொண்டால் போதும். விவரமாக எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. | 47. | சிறு சிறு காரியங்களையும் நேர்த்தியாகச் செய்யும்பொழுதுதான் நமக்குப் பெரிய அளவில் வெற்றி கிடைக்கிறது. |
| 48. | நம்முடைய வாழ்க்கை நிலைக்கு ஏற்றவாறு நம்முடைய ஆசைகள் இருக்கவேண்டும். | 48. | வாழ்க்கையில் உயர வேண்டும்என்று நமக்கு வரும் ஆர்வத்திற்கு அளவில்லை. ஆர்வம் எந்த அளவிற்கு அதிகரிக்கிறதோ அந்த அளவிற்கு வாய்ப்பும் நம்மைத் தேடி வரும். |
| 49. | நம்முடைய வாழ்க்கை குறுகிய ஆயுள் காலத்தைக் கொண்டதால் வேகமாக வாழ்ந்து ஆசைகளை எல்லாம் அனுபவித்துக்கொள்ள வேண்டும். | 49. | வாழ்க்கையை வேகமாக வாழ்பவர்கள் சீக்கிரம் சோர்வு அடைந்து-விடுகிறார்கள்என்பதும் உண்மை. இறுதியில் பார்த்தால் நிதானமாக போகிறவர்களைவிட இவர்கள் குறைவாகத்தான் சாதித்திருப்பார்கள். |
| 50. | தனிப்பட்ட சொத்துரிமை பாதுகாக்கப்பட வேண்டியது. | 50. | உலகம் சத்தியஜீவியமான பிறகு தனியார் சொத்து மற்றும் பரம்பரைச் சொத்தும் மற்றும் வாரிசு உரிமை என்று இவையெல்லாம் இருக்கா. |

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கீழிருந்து நாம் பணத்தை எட்டினால் அது அசுரன். மேலிருந்து அதை நாடினால் அது அன்னையின் சக்தி.

***பணம் அன்னை சக்தியாகும் அசுரன்.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIX. Life

The conclusion is a logical necessity. Page No.184
It imposes itself. Para No.18
We can observe the surface process.
There emerges this inevitability.
It does so in the light of the evolutionary theme.
Let us put aside all other considerations.
Still this is evident.
Life in the plant is differently organised than in the animal.
Yet it is the same power.
It is marked by several characteristics.
Birth, growth and death are some of them.
Propagation by seed is a characteristic.
Death by decay is one more.
It comes by malady or violence too.
Maintenance is by indrawing of nourishing elements.
They are from without.
Life depends on light and heat.
It is capable of productiveness and sterility.



## 19. வாழ்வு

இம்முடிவு தர்க்கரீதியாகத் தவிர்க்க முடியாது.
தன்னை ஏற்கும்படி நிர்ப்பந்திக்க வல்லது.
மேல்மனத்தில் நடப்பதைக் காணலாம்.
தவிர்க்க முடியாதுஎன்பது அங்கு தெரியும்.
பரிணாமத்தைக் கருதினால் இது விளங்கும்.
மற்றதை அனைத்தும் விலக்குவோம்.
விலக்கியபின்னும் இது தெளிவு.
தாவரத்திலுள்ள வாழ்வு விலங்கிலுள்ள வாழ்விலிருந்து வேறுபட்டது.
இருந்தாலும் இரண்டும் ஒன்றே.
வாழ்வுக்குப் பல குணங்களுண்டு.
பிறப்பு, வளர்ப்பு, மரணம் ஆகியவை சில.
விதையிலிருந்து செடி வளர்வது ஓர் அம்சம்.
அழிவால் வரும் மரணம் அடுத்தது.
கஷ்டத்தாலும், வன்முறையாலும் மரணம் வரலாம்.
உணவுப்பொருளை உட்கொள்வதால் உயிர் வாழ்வது ஓர் அம்சம்.
இவை புற அம்சங்கள்.
உயிருக்கு வெளிச்சமும், உஷ்ணமும் தேவை.
பெருக்கமும், மலடித்தனமும் உண்டு.

Sleep, waking, energy, depression are yet others.
Passage from infancy to maturity of age is one.
The plant contains the essences of the forces of life.
Therefore it is the natural food of animal existences.
Life has a nervous system.
It is conceded.
It reacts to stimuli.
There is a beginning of submental sensations.
It is an undercurrent.
It is purely of vital sensations.
Thus the identity becomes closer.
Still, plants are evidently a stage of life evolution.
It is an intermediate stage.
It is there between animals and inanimate Matter.
Life is a Force evolving out of Matter.
It culminates in Mind.
If this is true, we know what to expect.
We are bound to suppose that it is already there in Matter itself.
It is submerged or latent in Matter.
Matter is material subconscience or inconscience.
For from where else can it emerge?
Matter evolves life.
It presupposes a previous involution of it.

Or, we can suppose it is a new creation.
If so, it must have been introduced into Nature.
That would be magical.
Or, it would be unaccountable.
Let us suppose it to be so.
Then it must be a creation out of nothing.



தூக்கம், விழிப்பு, சக்தி, சோகம் ஆகியவை சில.
சிறு பிராயத்திலிருந்து வளர்ந்து முதிர்வது ஒரு குணம்.
உயிருக்குத் தேவையான சக்தியைத் தாவரம் பெற்றுள்ளது.
அதனால் தாவரம் விலங்கிற்கு உணவாகிறது.
வாழ்வுக்கு உணர்ச்சி மண்டலம் உண்டு.
இதை ஏற்கலாம்.
தொட்டால் இவ்வுணர்ச்சி செயல்படும்.
மனத்திற்குக் கீழுள்ள உணர்வு இங்கு ஆரம்பமாகிறது.
இது மறைவாகச் செயல்படும் சக்தி.
இது நரம்பின் உணர்ச்சி.
இதன்மூலம் ஐக்கியம் உருவாகிறது.
வாழ்வின் பரிணமத்தின் தாவரம் ஒரு நிலை.
இது இடைப்பட்ட நிலை.
விலங்கிற்கும் ஜடத்திற்கும் இடையே தாவரம் உண்டு.
ஜடத்தினின்று வாழ்வு ஒரு சக்தியாகப் பரிணமிக்கிறது.
இதன் முடிவு மனம்.
இது சரியானால், என்ன எதிர்ப்பார்க்கலாம்என நாம் அறிவோம்.
ஏற்கனவே ஜடத்தில் இது இருப்பதாக நாம் கொள்ளலாம்.
ஜடத்துள் மறைந்து வித்தாக வாழ்வுள்ளது.
ஜடம்என்பது ஜடஇருள், ஜடமான ஆழ்மனம்.
வேறு எங்கிருந்து வாழ்வு வெளிவர முடியும்?
ஜடம் பரிணாம வளர்ச்சி பெறுகிறது.
இது உண்மையானால், ஏற்கனவே வாழ்வு ஜடத்துள் மறைந்திருக்க வேண்டும்.
இல்லையேல், புதிய சிருஷ்டிஎனக் கொள்ளலாம்.
அப்படியானால், அது இயற்கையுள் புகுந்ததாக இருக்கலாம்.
அது மந்திர வித்தையாகும்.
அல்லது, இது விளக்க முடியாததானதாகும்.
நாம் இதை அப்படியே கொள்வோம்.
அப்படியானால் சூன்யத்திலிருந்து வாழ்வை உற்பத்தி செய்திருக்க வேண்டும்.

Or, it must be a result of material operation.
In that case it cannot be accounted for by anything in the operations themselves.
Nor can it be explained by any element in them.
That element may be of kindred nature.
We can conceive it descended from above.
It may be from some supraphysical plane above.
It must be above the material universe.
The first two suppositions are arbitrary.
We can dismiss them.
The last explanation is possible.
It is quite conceivable.
It is true in the occult view of things.
There can be a pressure from some plane above.
It must be above the material universe.
We can think it has assisted the emergence of life here.
But, this does not include the origin of life from Matter itself.
It may be a primary and necessary movement.
The Life world or Life plane can exist.
It may exist above the material plane.
That by itself does not lead to the emergence of Life in matter.
For that the Life plane must exist as a formative stage.
It must be part of a descent of Being through several grades.

They can be powers of itself.
The descent must be into the Inconscience.
It must result in the involution of itself with all these powers in Matter.
It must be for a later evolution and emergence.
The signs of this submerged life may be discoverable.



அல்லது ஜடம் செயல்படுவதால் ஏற்பட்டதாக இருக்க வேண்டும்.
அதுவே சரியெனில் ஜடச்செயலுள் எதனாலும் இதை விவரிக்க முடியவில்லை.
வேறு எந்த வகையாலும் இதை விளக்க முடியாது.
இந்த அம்சம் வாழ்வுக்குரியதாக இருக்கலாம்.
மேலிருந்து இறங்கி வந்ததாக நாம் கொள்ளலாம்.
மேல் நிலையிலுள்ள ஒரு லோகமாக அது இருக்கலாம்.
அது ஜடலோகத்திற்கு மேலிருக்க வேண்டும்.
முதலிரண்டு கொள்கைகட்கும் அடிப்படையில்லை.
நாம் அவற்றை நிராகரிக்கலாம்.
கடைசி விளக்கம் ஏற்கக்கூடியது.
இது அறிவுக்குப் பொருத்தமானது.
சூட்சும உலகுக்கு இக்கொள்கை பொருந்தும்.
மேலேயுள்ள ஒரு லோகம் நிர்ப்பந்தம் செய்யலாம்.
அது ஜடலோகத்தைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும்.
அந்த லோகம் வாழ்வு இங்கே எழ உதவியதாகக் கொள்ளலாம்.
ஜடத்திலிருந்து வாழ்வு வெளிவருவதை இது எப்படி ஏற்கும்?
இது அடிப்படையான அவசியமான செயலாக இருக்க வேண்டும்.
வாழ்வின் நிலை, வாழ்வின் லோகம் இருக்க வேண்டும்.
அது ஜடத்திற்கு மேலிருக்க வேண்டும்.
அது இருப்பதால் வாழ்வு ஜடத்தினின்று எழுகிறதுஎனக் கூற முடியாது.
அது நடக்க வாழ்வு லோகம் உருவம் பெறும் நிலையிலிருக்க வேண்டும்.
ஒரு ஜீவன் மேலிருந்து கீழே வரும் பல நிலைகளில் இது ஒன்றாக இருக்க வேண்டும்.
அந்த ஜீவனின் சக்தியாக அப்பகுதிகளிருக்கலாம்.
இறங்கி வருவது ஜடஇருளில் நுழைய வேண்டும்.
இந்த எல்லா சக்திகளும் ஜடத்துள் புதைந்திருக்க வேண்டும்.

பிறகு பரிணாமத்தால் வெளிவர முன்கூட்டி இப்படி நடக்க வேண்டும்.
அமிழ்ந்துள்ள வாழ்வின் அடையாளங்களைக் காணலாம்.

Maybe unorganised or rudimentary in material things.
Or there may be no signs.
It may be because this involved Life is in full sleep.
All this is no question to us.
They are of no capital importance.
The material Energy aggregated.
It forms and disaggregates.
In either case it is the same power.
It is in another grade of itself.
That Life-Energy expresses itself in birth, growth and death.
It just does the works of Intelligence.
As in a somnambulist subconsciousness.
It betrays itself as the same Power.
In another grade it attains the status of Mind.
It has a character.
It shows it contains in itself.
It may not be in their characteristic organisation.
It may not be in their process.
They are the yet undelivered powers of Mind and Life.

Page No.186
Para No.19

Life reveals itself.
It is essentially the same everywhere.
From atom to man it is the same.
The atom contains the subconscious stuff.
It contains the movement too of being.
They are released into consciousness in the animal.
The plant life is a midway stage in the evolution.
Life is really a universal operation.
It is an operation of conscious-Force.



அவை ஒழுங்கற்றிருக்கலாம் அல்லது ஜடத்தில் சிறியதாக இருக்கலாம்.
அடையாளமில்லாமலிருக்கலாம்.
மறைந்துள்ள உயிர் முழுவதும் தூங்குவதால் அப்படியிருக்கிறது.
இதெல்லாம் நமக்குக் கேள்வியில்லை.
அவற்றிற்குத் தலையாய முக்கியத்துவம்என்பது இல்லை.
ஜட சக்தி திரள்கிறது.
உருவம் பெற்று அழிகிறது.
எப்படியானாலும் அது ஒரே சக்தியே.
அது வாழ்வின் வேறொரு நிலையைச் சேர்ந்தது.
பிறப்பு, வளர்ப்பு, மரணத்தில் வாழ்வின் சக்தி வெளிப்படுகிறது.
அது அறிவின் வேலையைச் செய்கிறது.
ஏவல் செய்யப்பட்டவனின் ஆழ்மனம் போல் வேலை செய்கிறது.
அதுவும் அதே சக்தியாகத் தன்னை வெளிப்படுத்தும்.
அடுத்த கட்டத்தில் அது மனமாகிறது.
அதற்கொரு சுபாவமுண்டு.
தன்னைத் தன்னுள் அடக்கியதாக அது காட்டுகிறது.
அதுவே அதன் குறிப்பான செயலமைப்பாக இருக்காது.
அவர் வழியாக இருக்காமலிருக்கலாம்.
இவை மனமும் வாழ்வும் இதுவரை வெளிப்படுத்தாத சக்திகளாக இருக்கலாம்.

வாழ்வு வெளிப்படுகிறது.
எங்கும் அது அடிப்படையில் ஒன்றே.
அணுவினின்று மனிதன்வரை வாழ்வுஎன்பது ஒன்றே.
அணுவுள் ஆழ்மனம் உள்ளது.
ஜீவனின் சலனமும் அதனுள் உள்ளது.
விலங்கின் ஜீவியத்தில் அவை விடுபடுகின்றன.
பரிணாமத்தின் இடையில் தாவர வாழ்வுள்ளது.
வாழ்வு உண்மையில் பிரபஞ்சச் செயலாகும்.
சித்சக்தியின் செயலது.

It acts subconsciously on and in Matter.
Life is the operation that creates forms.
It maintains, destroys and recreates these forms.
It does so to the bodies.
It attempts by play of nerve-force.
It does so by currents of interchange.
It stimulates energy to awake conscious sensation.
It does so in those bodies.
In this operation there are three stages.
The lowest is in Matter.
The vibration is still asleep there.
It is entirely subconscious.
Therefore it appears wholly mechanical.
There is a middle stage.
Here it is capable of response.
It is still submental.
It is on the verge of consciousness.
The highest is our conscious mentality.
It is mentally perceptible sensation.
This is a transition.
It becomes a basis for the development of sense mind.
It develops intelligence also.
It is in the middle stage it is Life to us.
We distinguish it from Matter and Mind.
In reality it is the same in all three stages.
It is always a middle term between Mind and Matter.
It is a constituent of Matter.
It is instinct with Mind.
It is an operation of Conscious-Force.
It is not the mere formation of substance.



ஜடத்திலும், அதன்மீதும் அது ஆழ்மனத்தால் செயல்படும்.
ரூபங்களை சிருஷ்டிப்பது வாழ்வு.
காத்து, அழித்து, மீண்டும் அவற்றைப் புதுப்பிக்கிறது.
அதையே உடலுக்கும் செய்கிறது.
உணர்வின் சக்தியின் லீலைமூலம் இதைச் செய்ய முயல்கிறது.
சக்தி ஓட்டங்கள் கலப்பதன்மூலம் இதைச் செய்கிறது.
விழிப்பான உணர்ச்சியை எழுப்ப அது சக்தியைக் கிளப்புகிறது.
அதையும் உடலில் செய்கிறது.
இதில் மூன்று கட்டங்களுண்டு.
கடைசி கட்டம் ஜடம்.
அங்கு சக்தியின் கதிர் உறங்குகிறது.
அது முழுவதும் ஆழ்மனத்திற்குரியது.
அதனால் அது முழுவதும் இயந்திர இயக்கமாகத் தோன்றுகிறது.
இடைப்பட்ட நிலையுண்டு.
இங்கு உணர்ச்சிக்குப் பதில் உண்டு.
இருந்தாலும் இது மனத்திற்குக் கீழ்ப்பட்டது.
இது ஜீவியத்தின் எல்லைக்குள் வருகிறது.
அதன் உச்சக்கட்டம் நம் விழிப்பான மனம்.
அது மனம் அறியும் உணர்வு.
இது மாறும் நிலை.
புலன் அறிவு வளர இதுவே அடிப்படை.
இது அறிவையும் வளர்க்கும்.
இடைப்பட்ட நிலையில் நாம் அதை வாழ்வுஎன்கிறோம்.
ஜடம், மனத்திலிருந்து நாம் அதைப் பிரித்துப் பார்க்கிறோம்.
எல்லா நிலைகளிலும் அது ஒரே சக்தியே.
எப்படியும் அது மனத்திற்கும், ஜடத்திற்கும் இடையே நிற்கும்.
இது ஜடத்தில் உள்ளது.
இதற்கு மனம் உண்டு.
சித்-சக்தி இவ்விதம் செயல்படும்.
பொருள் உருவம் பெறுவதில்லை இது.

Nor is it the operation of Mind.
Its object of apprehension is substance and form.
It is rather an energising of conscious being.
It is the cause and support of the formation of substance.
It is an intermediate source and support.
It supports the conscious mental apprehension.
Life is this intermediate energising of conscious being.
Life liberates into sensitive action.
It also does it for reaction.
It liberates a form of the creative force of existence.
It was working subconsciously or inconsciently.
It is absorbed in its own substance.
It supports in action the apprehensive consciousness.
It liberates it into action.
It is called mind.
It gives it a dynamic instrumentation.
It works on its forms.
It also works on forms of life and matter.
It is a middle term.
It connects and supports them – the mutual commerce.
They are mind and matter.
Life provides this means of commerce.
It does so by the continual currents of her pulsating nerve-energy.
It carries the force of the form as the sensation.
It modifies mind.
It brings back force of Mind as will.
It modifies Matter.
This is nerve-energy.
We call this Life.



மனத்தின் செயலுமில்லை.
இது புறத்தில் காண்பது ரூபம், பொருள்.
ஜீவன் சக்தி பெறுவதாகும்.
பொருள் உருவாகும் காரணம் இதுவே. இதன் ஆதரவு அதற்குள்.
ஆதரவுக்கும், ஆதியாக இருப்பதற்கும் இடைப்பட்டநிலை.
விழிப்பான மனம் உணர்வதற்கு இது ஆதரவு.
ஜீவன் சக்தி பெறுவது இவ்விடைப்பட்ட வாழ்வுமூலம்.
உணர்வுள்ள செயலில் வாழ்வு தன்னை விடுவிக்கிறது.
செயலுக்குச் செய்வதையே மறுப்புக்கும் செய்கிறது.
சிருஷ்டித்திறனுள்ள சக்தியை வாழ்வு வெளிப்படுத்துகிறது.
வாழ்வு ஆழ்மனத்திலும், ஜட இருளிலும் செயல்படும்.
தன் பொருளுள் வாழ்வு தன்னைக் கிரகித்துக்கொள்கிறது.
புறமான ஜீவியத்தின் செயலை அது ஆதரிக்கிறது.
செயலில் அதை விடுவிக்கிறது.
அதற்கு மனம்எனப் பெயர்.
செயலுக்கு அதைத் தீவிரமான கருவியாக்குகிறது.
ரூபத்தில் செயல்படுகிறது.
வாழ்விலும், ஜடத்திலும் செயல்படுகிறது.
இது இடைப்பட்டது.
அவை செயல்படுவதை ஆதரித்துத் தொடர்புகொள்கிறது.
அவை மனமும் ஜடமுமாகும்.
வாழ்வு இவ்வுறவுக்கு வழி செய்கிறது.
உணர்வின் சக்தியின் அதிர்வு தொடர்ந்து ஓடுவதின்மூலம் இதைச் செய்கிறது.
ரூபத்தின் சக்தியை உணர்வாகச் செய்கிறது.
இது மனத்தை மாற்றுகிறது.
மனத்தின் சக்தியை உறுதியாகக் கொண்டுவருகிறது.
இது ஜடத்தை மாற்றிஅமைக்கிறது.
இது நரம்பில் எழும் சக்தி.
நாம் இதை வாழ்வென்கிறோம்.

It is the *Prana* or Life-force of the Indian system.
But nerve-energy is only the form it takes in the animal being.
The same *Pranic* energy is present in all forms.
It is there in the atom.
Everywhere it is the same in essence.
Everywhere it is the same operation of Conscious-Force.
It is Force supporting and modifying the forms.
They are its own forms.
It has a substantial existence.
It is Force with sense and mind secretly active.
It is first involved in the form.
There it is preparing to emerge.
Finally it emerges from its involution.
This is the whole significance of omnipresent Life.
It has manifested and inhabits material universe.

*End.*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அறிவைவிட உணர்வு இலட்சியத்தைப் பூர்த்தி செய்யும். உடல் இலட்சியத்தை ஏற்றால் பூர்த்தி பூரணமாகும். ஞானம், பக்தி, கர்மத்திற்கு யோகத்தில் வித்தியாசம் உண்டு. அன்னையின் யோகத்தில் அவை ஜீவியம்; ஆனந்தம்; சத்தியம்.

***ஞானம், பக்தி, கர்மம்,***
***ஜீவியம், ஆனந்தம், சத்தியமாகும்.***



இந்திய தத்துவம் கூறும் பிராணன் இதுவே.
விலங்கின் ஜீவனில் இது நரம்பு சக்தியாகிறது.
இதே பிராணன் எங்கும் உள்ளது.
இது அணுவினுள் உள்ளது.
எல்லா இடங்களிலும் அடிப்படையில் இதையே காணலாம்.
எங்கும் செயல்படுவது சித்-சக்தியே.
ரூபத்தை ஆதரித்து செயலில் மாற்றும் சக்தியது.
அவை இதன் ரூபங்களே.
இதற்கு வலுவான வாழ்வுண்டு.
புலனறிவுள்ள சக்தியிது. இரகஸ்யமாகச் செயல்படுகிறது.
இது முதலில் ரூபத்துள்ளிருக்கிறது.
வெளிவர அங்கு இது ஆயத்தமாகிறது.
மறைவிலிருந்து எழுந்து முடிவாக வெளிவருகிறது.
எங்கும் நிறை வாழ்வின் முழுமுக்கியத்துவம் இதுவே.
ஜடமான பிரபஞ்சத்தில் வெளிப்பட்டு இருக்கிறது.

*முற்றும்.*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சுற்றியுள்ளவரை - நமக்கு எப்படி முக்கியம்என்றறியாமல் - முக்கியமாகக் கருதுவது ஜடவாழ்வு.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பற்று நிறைந்த உணர்வில்லாவிட்டால், மனம் சொத்தையும் பொருளையும் நாடும்.

***பற்றான உணர்வு சொத்துக்குச் சமம்.***

# அன்பு அமிர்தமாகி,
# அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **விருந்துபசாரம்**

❀ சாப்பாடு போடுவது.

*இது தேவையில்லாதது.*

தேவையானாலும், தேவையில்லாவிட்டாலும் போட முறையுண்டு.

போடும்பொழுது போடுபவர் வயிறு குளிரவேண்டும்.

சாப்பிடுபவர் சிறிது குறைவாகச் சாப்பிட்டு, அதிகமாகச் சாப்பிட்டதாக உணரவேண்டும்.

சாப்பாட்டின் quality தரம் எதுவானாலும் அது உள்ளே - வாயிலில்லை - இனிக்கவேண்டும்.

அதற்கு அடையாளம் அவர்கள் மீண்டும்மீண்டும் வருவது, சாப்பாட்டைக் கேட்டுச் சாப்பிடுவது.

சாப்பாடு அப்பொழுது பிரசாதமாகும்.

முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து.

முகமலரும்படிப் போட அகம் மகிழவேண்டும்.

சாப்பாடு போடுவதால் வீட்டில் பண்டங்கள் provisions பெருகவேண்டும்.

சாப்பிடுபவர் விரும்பும் சமையல் தானே அமையவேண்டும்.

இந்த ஒரு வேலையை முறையாகச் செய்தால் அவருக்கு வாழ்நாள் முழுவதும் பஞ்சம் வாராது.

ஆசாரக் குடும்பங்களில் மிச்சம் கூடாதுஎன்பதால் திட்டமாகச் சமைப்பார்கள்.



அவன் பரம்பரைப் பட்டினிக்கு அது ஒரு காரணம்.

ஆசாரமானவன் சாப்பிட்ட மிச்சத்தை ஆசாரமில்லாதவன் சாப்பிடுவது ஆசாரத்திற்குக் குந்தகம்.

இந்த நோக்கம் ஒரு வகையில் உயர்ந்தது.

இதன்மூலம் ஆசாரமானவன் அனைவரிடமுமிருந்து பிரிகிறான்.

ஆசாரமானவர்கள் அனைவரும் பெரும்பாலும் ஏழைகள்.

உலகத்திலிருந்து ஓர் ஏழை பிரிந்து மற்ற ஏழைகளுடன் ஐக்கியமாவது ஏழ்மை நீடிக்க உதவும்.

பூரணயோகம் வாழ்வனைத்தும் யோகம்என்கிறது.

ஆசாரமானவன் ஒதுங்கி ஏழையாகிவிட்டான்என்பது உண்மையானால் அன்னை பக்தர் மற்றவரிடமிருந்து விலகி வசதி பெறுவது எப்படி உண்மையாகும்?

சன்னியாசி வாழ்க்கையை ஒதுக்குவது அவன் தத்துவம்.

நாம் - அன்பர்கள் - எப்படி அவனிலிருந்து மாறுபட்டவர், நாமும் அவன் போலவேயில்லையா?

நம் - அன்பர் - தத்துவம் வாழ்வை ஏற்பது.

வாழ்வை ஏற்பதுஎனில் வாழ்வின் தாழ்ந்த நிலைகளை ஏற்பதுஎன்று கொள்ளாமல் வாழ்வின் பெரிய அம்சங்களை ஏற்பதுஎனப் பொருள்.

படித்தவன் வாழ்வை ஏற்பதுஎன்பது, படிக்காதவனை இதர அம்சங்களில் சேர்ப்பது, படிப்பு சம்பந்தமான விஷயத்தில் சேர்ப்பதில்லை.

நாலு பேர் ஓடும்பொழுது நடுவே ஓடுஎன்றால் நாலு நல்லவர்எனப் பொருள். ஓர் ஊரில் அனைவரும், நாட்டாமைக்காரன் உள்பட, திருடினால் நாமும் திருட வேண்டும்எனப் பொருளில்லை. ஆபீஸில் அனைவரும் இலஞ்சம் வாங்கினால் நாமும் இலஞ்சம் வாங்கவேண்டும் எனப் பொருளில்லை.

- சன்னியாசி வாழ்வின் எந்த அம்சத்தையும் ஏற்பதில்லை.
- அன்பர் வாழ்வின் பண்பு நிறைந்த பகுதிகளை ஏற்கிறார். தாழ்ந்த பகுதிகளை ஏற்க மறுக்கிறார்.

சாப்பாடு அளவு கடந்து போட்டதால் எவரும் நஷ்டமடைந்ததில்லை.

நாகரீகத்தின் அடிப்படையும், சிகரமும் சாப்பாடேயாகும்.

நமக்கு நாகரீகம் தேவையில்லை.

அன்னைக்கு நல்லது நமக்கும் நல்லது.

உலகத்துச் சட்டம் அத்தனையையும் நாம் கடந்து வருவது அவசியம்.

சாப்பாடு போடும் நாகரீகம் ஹோட்டல் இல்லாத காலத்து நாகரீகம்.

இன்று அது தேவையில்லை.

ஒரு பழக்கத்தைக் கடக்க அதை அனுஷ்டித்து பூர்த்தி (saturate) செய்து தாண்டிவர வேண்டும். Overcome செய்ய வேண்டும்.

பலருக்குச் சாப்பாடு போடுவதே அதிர்ஷ்டமாகும், யோகமாகும்.

அன்னம்என்றால் உடல்.

ஜடமான மக்களுக்குத்தான் (physical people) சாப்பாடு அவசியம்.

மற்றவருக்கு அந்த அவசியமில்லை.

It is only courtesy. அது ஒரு நாகரீகம்.

வெளிநாட்டில் ஹோட்டலில் அவரவர் பில் அவர்களே கொடுப்பார்கள்.

அது அநாகரீகம். சமூகமே சுயநலமாக, கருமியாக இருப்பதைக் காட்டுகிறது.



## ✡ சுத்தம்

❀ ***சுத்தம் தெய்வீகமானது.***

சுத்தம் தரும் செல்வத்தை நான் வலியுறுத்துகிறேன்.

உலகில் நல்லவை அனைத்தும் சுத்தத்தின் அடிப்படையில் எழுந்தவை.

நல்லதுஎனில் - ஆத்மா, ஞானம், ஐக்கியம், சுமுகம், மௌனம், சாந்தி, சக்தி, அழகு, சந்தோஷம், அன்பு - அவற்றிற்கு அடிப்படையுண்டு. அவற்றுள் சுத்தம் முக்கியம்.

அழுக்கு, அலங்கோலமுள்ள இடத்தில் வியாதி, அறியாமை, சண்டை, நஷ்டம், திருடு, சந்தேகம், தப்பபிப்பிராயம், திறமைக் குறைவு இருக்கும்.

சுத்தம் சோறு போடும்.

ஆங்கிலேயர்களை டாக்டர்கள் குளித்தால் ஆயுள் குறையும் என்றனர். பல நூற்றாண்டுகள் அவர்கள் குளிக்காமல் இருந்தனர். மிருகமாக இருந்தனர், குளிப்பதில்லை.

பிரபல பிரெஞ்சு அரசர் பதினான்காம் லூயி வாழ்நாளில் இரு முறையே குளித்தார்.

ஞானஸ்நானம் செய்தது ஒன்று, உடல் புதைக்கப்படுமுன் குளிப்பாட்டியது அடுத்தது.

காரல் மார்க்ஸ் குளித்ததேயில்லை.

200 வருஷத்திற்குமுன் பல்பொடி, பிரஷ் இல்லை.

சர்ச்சில் ஆங்கிலேயர் உடலில் அழுக்கு படைபடையாக இருக்கிறது என்றார்.

வீட்டையும், சுற்றுப்புறத்தையும் கண்ணாடிபோல் சுத்தமாக வைத்திருந்தனர்.

ஆங்கிலேயர் பொய் சொல்வதில்லை.

அகம் தூய்மையானால், புறம் அசுத்தமாகும்.

இந்தியர் சுத்தத்தை தெய்வீகமாக்கினர்என ஆங்கிலேயர் கூறுகின்றனர்.

பாண்டியில் (soldiers) சோல்தா வீடுகள் பளிங்கு போலிருக்கும்.

ஒழுங்கும், சுத்தமும் சுபிட்சம் தரும்.

சுத்தமின்றி வரும் செல்வம் நல்லது செய்யாது.

அழுக்கும் செல்வமும் சேர்ந்திருப்பதைக் காணமுடியாது.

உரத்த குரலும் அழுக்கும் இணை பிரியாமலிருக்கும்.

சுத்தத்தைவிட சுத்தம் தேவைஎன்பது முக்கியம்.

சொரணை உரத்த குரலுக்கும், அழுக்குக்கும் உதவாது.

சொரணை அழுக்கை விலக்கும்.

ரோஷம்என்பது வேண்டாத சொரணை.

## *சுத்தம் எந்த அளவுக்குச் சோறு போடும்?*

- ★ உலகிலேயே அதிக மழை 425" பெய்யும் சிரபுஞ்சியில் கோடையில் தண்ணீர் பஞ்சம்.
- ★ இந்திய ஜனாதிபதி ஒருவர் பதவியில் இருக்கும் பொழுது, ஒய்வு பெற்றபின் வருமானத்திற்குண்டான ஏற்பாடுகளைச் செய்தார்.
- ★ நம்மூரில் காபி, டீ சாப்பிட்டாலும், ஒரு வாழைப்பழம் சாப்பிட்டாலும் வாயை அலம்புகிறோம். மேல் நாட்டார் (200 ஆண்டுகட்கு முன்) பல் துலக்குவதில்லை, எந்த சாப்பாட்டிற்குப்பின்னும் வாயலம்புவதில்லை. அன்றே அவர்கள் பெரும்பணக்காரராக இருந்தனர். நாம் எப்பொழுதும் ஏழைகளாக இருக்கிறோம்.
- ★ மேல் நாட்டார் எப்பொழுதும் மெல்லிய குரலில் பேசுவார்கள். வழக்கமாக நமக்கு உரத்த குரல் உண்டு.



- ★ அவர்கள் அயராத உழைப்பாளிகள். நமக்கு வேலை செய்யப் பிடிக்காது.
- ★ குறித்த நேரத்தில் செயல்படுவது நமக்கு வழக்கமே இல்லை. அவர்களால் ஒரு நிமிஷம் தாமதிக்க முடியாது.
- ★ அவர்கள் பிறரை உதவிகேட்கமாட்டார்கள். நாம் அனைவரையும் உதவி கேட்போம்.
- ★ கொடுத்த வார்த்தை அவர்கட்கு வேதவாக்கு, மாறுவதுஎன்பது அவரறியாதது. நமக்கு வார்த்தை "சும்மா". நடந்தால்தான் நிலை.

இவற்றுள் நல்லவை பணம் ஈட்டும், அல்லவை பணத்தை அழிக்கும். ஒருவர் பெற்ற செல்வம் எது மிச்சமாக இருக்கிறது என்பதைப் பொறுத்தது. முன்யோசனை, பெற்றதைக் காப்பாற்றுவது, எதையும் நாடாதது, சுத்தம், மென்குரல், உழைப்பு, குறித்த நேரத்தில் செயல்படுவது, பிறர் உதவியை நாடாதது, வார்த்தையைக் காப்பாற்றுவது பணம்பெறும். மற்றவை ஏழ்மையை வளர்க்கும். இரண்டும் சேர்ந்து எது மிகையாக இருக்கிறதோ அது நம் செல்வத்தை நிர்ணயிக்கும்.

## ✡ ஒழுங்கு (Regularity, Orderliness)

### ❀ Regularity *(ஒழுங்கு).*

குறித்த நேரத்தில் செயல்படுவதும், அழகாக அடுக்கி வைப்பதும் சேர்ந்தது ஒழுங்கு.

Punctualityயும், orderlinessம் சேர்ந்தது regularity.

தினமும் சூரியன் அதற்குரிய நேரத்திலுதிப்பது regularity.

நம் வீடு, அல்லது கம்பனியில் நடக்கும் விஷயங்கள் அது போல் நடந்தால் செல்வம், செழிப்பாக இருக்கும்.

வருஷா வருஷம் இந்த நாளில் இப்படித்தான் நடக்கும் என்பது regularity, ஒழுங்கு.

அப்படியிருக்க குறித்த நேரத்தில் செயல்படுவது punctuality எல்லா இடங்களிலுமிருக்க வேண்டும்.

செயல்களில் முறை orderliness காணப்படும்.

பெருஞ்செல்வம்பெற ஒழுங்கு regularity போதும்.

(It is a subconscious orderliness such as our breathing, eyesight or hearing).

பார்வை, மூச்சு ஆகியவை ஆழ்மன ஒழுங்கு.

ஒரு வீட்டிற்கு 5 வருஷம் கழித்துப் போனால், 'இப்போது எல்லாம் மாறிவிட்டது' அல்லது 'அதெல்லாம் அந்தக் காலம்' எனக் கேள்விப்படுகிறோம். உலகம் மாறும்.

ஒழுங்கு regularity இருக்க அடிப்படையான விஷயங்கள் மாறக்கூடாது.

ஒரு முறை அன்பு - காதல் - பிறந்த இதயம் விஷயம் மாறி பல ஆண்டுகளானபின் ஆழத்தில் தேடிப் பார்த்தால் அதே அன்பு, அதே காதல் உயிருடனிருப்பது தெரியும்.

Heart never grows old. இதயத்திற்கு வளர்ச்சியால் தளர்ச்சியில்லை.

Body grows old, not heart. உடல் தளரும், உள்ளம் தளராது.

(It is the regularity of heart which we call love).

மறந்தறியாதது மனம்.

சூரிய சந்திரர் கதி மாறலாம், நெஞ்சம் மாறாது.

டிராலப் நாவல்களில் 20 அல்லது 30 காதல் காட்சிகளுண்டு.

அங்கு இந்த விளக்கத்தைக் காணலாம்.

காதல் பிறந்த நெஞ்சம் காதலையறியும்.

மேல் நாட்டார் வேலையில் ஒழுங்கைக் கண்டனர்.

அங்கு ரயில் ½ நிமிஷம் தாமதமாகாது.



வாழ்வில் சில மாறுவதில்லை.

காதல் அடுத்தது.

வேலையில் ஒழுங்கு சுபிட்சம்.

உணர்வில் ஒழுங்கிற்கு காதல்எனப் பெயர்.

சுபிட்சம், ஒழுங்கு ஆகியவை வளமான வாழ்வின் அஸ்திவாரங்கள்.

## ✡ ஒழுங்கு முறை (Orderliness)

❀ தமிழில் ஒழுங்குதவிர orderlinessஐக் குறிக்கும் சொல்லில்லை. எனக்குத் தெரியவில்லை.

ஒழுங்குஎனில் கட்டுப்பாடு (discipline, regularity, etc.).

ஒழுங்கு அழகானது.

இக்காலத்தில் கடைகளில் ஒழுங்கு காணப்படுகிறது.

அழகுஎன்பது மனம்பெறும் ஆனந்தம்.

ஆனந்தம் சச்சிதானந்தப்பகுதி.

சச்சிதானந்தம் கடவுள்.

எனவே முடிவாக ஒழுங்கு தெய்வம்.

குறித்த நேரத்தில் செயல்படுவது சக்தி வாய்ந்தது.

ஒழுங்கு அதனின்று வருவது.

குறித்த நேரத்தில் எல்லாவிஷயங்களிலும் செயல்பட சம்மதிக்கும் ஏழை பெரும்பணக்காரனாவான்.

ஜெர்மனியில் ரயில் 1 நிமிஷம் தாமதமாக வருவதில்லை.

குறித்த நேரத்தில் செயல்படும் கட்டுப்பாடு ஏற்றுக் கொண்டால், வாழ்வை ஊடுருவும்.

எனவே அது சக்தி வாய்ந்தது.

குறித்த நேரத்தில் செயல்படுவது அரச இலட்சணம்.

ஆரம்பம் நேரத்திலிருந்தால் முடிப்பதும் நேரத்தில் முடிக்க வேண்டும்.

ஒவ்வொரு காரியமும் நேரத்தில் நடந்தால்தான் அது முடியும்.

அது பெரிய காரியம்.

அதை ஏற்றால் மனம் உயரும்.

இதற்கு இந்தசக்தி அதன் முறையினின்று (organisation) வருகிறது.

முறை சக்தி.

- ஆர்வம் சக்தியைத் தரும் (energy).
- உறுதி அதைச் செயல்படச் செய்யும் (force).
- முறை அதைச் சக்தியாக்கும் (power).
- பலன் வருவது திறமையால் (skills).

Energy – force – power – results

↑ ↑ ↑ ↑

Aspiration – direction – organisation – skills

நேரத்தில் செயல்படுவது, ஒழுங்கு, ஒழுங்கு முறை, சுத்தம் ஆகியவை சேர்ந்து செயல்படும்.

எதையும் பிரித்து எடுக்க முடியாது.

மேல் நாட்டார் வீடுகளைப் படத்தில் காண்கிறோம்.

தட்டு, டம்ளர், கப் எவ்வளவு பளபளப்பாக இருக்கின்றன. ஸ்கேலால் அளந்து அவற்றை ஒழுங்காக வைப்பார்கள். எல்லா பாத்திரங்களும் வெள்ளியாலானவை. அது aristocracy. அவர்கள் பணக்காரர்கள்.

***ஒழுங்கு செல்வம் தரும்.***

*தொடரும்....*

❀ ❀ ❀



# குரு வந்தனம்

## ஞான குருவே!

பாலைவனத்திலும் பொங்கித் ததும்பும்
கருணைமிக்க நீரூற்றின் அருள் மணமாய்
எங்கள் எல்லோர் வாழ்விலும் நீங்கள் நுழைந்தீர்கள்!

அருகில் நெருங்கி,
அதிலிருந்து மூழ்கிக் கலந்து கரைந்து போக
நாள்தொறும் அன்பின் நெகிழ்ச்சியோடு
அழைப்பு விடுத்தீர்கள்!

தர்க்க அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்டவற்றையும்
அறிவியல் சூத்திரம்போல் உறுதியாய்ச் சொல்லும்
ஞானத்தின் விஸ்வரூபமாய் பரந்து விரிந்து
எங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டீர்கள்!

புதியதோர் எல்லையிலாத உலகிலிருந்து
எங்கள் வாழ்வை மலரச் செய்கிறீர்கள்!

கடை விரித்தார் கொள்வாரிலையென
அருகிலிருந்து தனிமைக்குச் சென்றாலும்
கண்ணின் பாவையாய்,
என்றென்றும் உங்கள் கண்ணின் பாவையாய்
எங்களை நிறுத்தி வைத்தீர்கள்!

என்னை ஏன் வழிபட வேண்டும்
நீ நானாகலாம் என்ற அன்னையின் வாக்கிற்கேற்ப
எங்களை உங்கள் உயரத்திற்கு ஏற அழைத்தாலும்
வழுக்குமரத்தில் ஏறிச் சறுக்கி விழும்
மனித சுபாவத்தின் குழந்தைகளாய் வாழ்கின்றோம்.

வாழ்க்கையின் பயணத்தில்
ஒவ்வொரு நாளிலும் நிமிடத்திலும் நொடியிலும்
எங்களைவிட்டு ஆடாது அகலாது பிரியாமல் நின்று
எங்களுடனே கலந்து வழி நடத்தினாலும்
அடங்காமல் பிரிந்து சுதந்திரமாகப் பறக்க முற்பட்டுச்
சிறகொடிந்து நின்றாலும்
பரிவுடன் மீண்டும் மீண்டும்
தூக்கிவிட அயராது பாடுபடும் அருந்தவக் கருணையே!

இந்நன்னாளில்!

**எங்களை உண்மையற்றதிலிருந்து உண்மைக்கு வழி நடத்துங்கள்!**

**இருளிலிருந்து ஒளியை நோக்கி எங்கள் கைபிடித்துக் கூட்டிச் செல்லுங்கள்!**

**இறப்பிலிருந்து இறவாமைக்கு வழி காட்டுங்கள்!**

நீங்கள் பல்லாண்டு இவ்வையகம் வாழும்வரை
என்றும் நிலையாய் வாழ வேண்டுமென்பதே
அன்னை அன்பர்கள் அனைவரின்
ஒருமித்த ஒட்டுமொத்த ஆசையும் விருப்பமும்கூட!

எங்கள் ஆசையும் விருப்பமும்
உறுதியாய் என்றும் நிலைத்துநின்று
நடந்திட வேண்டி
அன்னையின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து
அவரின் பிரதிநிதியான உங்கள் திருவடிகளில் பணிகிறோம்!

***R. மகேஸ்வரி***

❀ ❀ ❀





## பகவான் ஸ்ரீ அரவிந்தர் குழப்பத்தை அனுபவிக்கிறார்

*(Volume IV, Page 45)*

“குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்” என்பது குறள். குழலும் யாழும் இனிய இசை. மழலை குழந்தையின் மனம் சிருஷ்டிக்க முயல்வதைச் சொல்ல முடியாமல் தடுமாறும் நாக்கின் ஒலி. வேட்பாளர் 4 இலட்சம் ஓட்டு பெற்று ஜெயித்தாலும் ஒரு ஓட்டின் முக்கியத்தை அறிவார். எதிரி தன்னை விட ஒரு வோட்டு பெற்றால் பெற்ற அத்தனையும் போகும்என்ற தெளிவு ஒவ்வொரு ஓட்டையும் முக்கியமாகக் கருதுகிறது.

### குழப்பம் என்றால் என்ன?

நாம் கோயிலுக்குப் போவது நல்லதுஎன அறிவோம். அது மனம் ஏற்கும் கருத்து. 10 அல்லது 20 தலைமுறையாகக் கோயிலுக்குப் போனதால் உணர்ச்சி கோயிலுக்குப் போவது நல்லதுஎன ஏற்றுக் கொண்டது. மேலும் உடலும் அதை அனுபவிக்கிறது. கோவிலைக் கடந்து சென்றால் உடல் சுருங்கி வணங்குகிறது. அறிவு வளர்ந்து ஆத்மா தெளிவுபட்டபின் கோவிலுக்குப் போவது சடங்கு, அதில் சாரமில்லை, தெய்வம் உள்ளேயிருக்கிறது, கோயிலில் உள்ளது சிலையென அறிந்தபின் *கோவிலுக்குப் போவதால் பக்தியின் தரம் குறைகிறதுஎன உணர பல ஆண்டு தவமிருக்க வேண்டும்.* அதுவும் புரிந்தபின் மனம் பழைய எண்ணத்தைக் கைவிடாது. பழைய எண்ணம் உள்ளவரை புதுஎண்ணம் சிறப்படைய முடியாது. பழைய கட்டடத்தின் மீது புதுக் கட்டடம் கட்டுவது போலாகும். பழைய கட்டடத்தை அழித்த பின்னரே புதுக்கட்டடம் எழும்.

மனம் கற்றதை விடாமல் புதியதைக் கற்க முடியாது. கற்றது சிதைவது குழப்பம். குழப்பம் ஏற்பட்டால் தெளிவு வரப்போகிறதுஎனப்

பொருள். புதிய கருத்து உருவாவது மனிதன் மனத்தில் புதியதாகப் பிறப்பது. அது சிருஷ்டி. அது நடக்க, உள்ளது அழியவேண்டும்.

*அழிவு ஆக்கலின் மறுபுறம்*

என்பது மனிதன் அறியக்கூடிய ஞானமில்லை. உடல் அழிவது மரணம். மரணம் தரும் அதிர்ச்சி பெரியது. மரணம் புனர்ஜென்மத்தின் ஆரம்பம்என மனிதன் அறிவான், உணரமாட்டான். மனிதனால் உணர முடியாததை ஆழ்ந்து, ஊன்றி அனுபவித்துத் திளைப்பது ஆண்டவன்.

வசதியுள்ளவர்க்கு அனைவரும் உதவ முன்வருவர். ஏழைக்கு எவரும் உதவ முன்வரமாட்டார்கள். பிறப்பைக் கொண்டாடும் மனிதன் இறப்பைக் கொண்டாடமாட்டான். அது இறைவனால் மட்டுமே முடியும். அதுபோல ஆக்கலை அனுபவிக்கும் இறைவன் அழிவை ஆக்கல் போல அனுபவிக்கிறான். அழிவு ஆக்கலாக மாறும் நிலை குழப்பம்.

- ✡ நமக்குக் குழப்பமாகத் தெரிவது ஆண்டவனுக்குச் சிருஷ்டி.
- ✡ குழந்தை உளறுவது பெற்றோருக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. புதிய சொல்லை மனத்தில் உருவாக்கி வாயால் பேச குழந்தை முயல்வதைப் பெற்றோர் அதில் காண்கின்றனர்.
- ✡ பயிற்சி தரும்பொழுது நமக்குப் பார்க்கப் பிடிக்காது. பாட்டானாலும், விளையாட்டானாலும், பாகவதரும், கோச்சும் பயிற்சியை சிருஷ்டியாக அனுபவிக்கிறார்கள்.
- ✡ *பெற்றோர் குழந்தையில் அனுபவிப்பதை, பாடகர் சிஷ்யனின் தடுமாற்றத்தை அனுபவிப்பதை, கோச் கற்பவன் சிரமப்படுவதை அனுபவிப்பதைப் போல,*

  இறைவன் குழப்பத்தை அனுபவிக்கிறான்.

  பகவான் ஸ்ரீ அரவிந்தர் இறைவனாகும்.

  பகவான் குழப்பத்தை அனுபவிப்பதை,

  அன்னை புரிந்துகொள்ள நாளாயிற்று.

  அதை இப்பகுதியில் எழுதுகிறார்கள்.
- ✡ குழப்பம்என்பது பழைய நிலை அழிந்து, புதிய நிலை உருவாகும் மாற்றம். இக்கண்ணோட்டத்தில் குழப்பம் சிருஷ்டியின் சிறப்பான நேரம்.
- ✡ பந்தியில் பரிமாறும் உணவை சமைக்கும் கட்டம் அலங்கோலமாக இருக்கும். சமையலின் அருமையை அதிகமாக உணரும் சமையல்காரருக்கு அது அற்புதம்எனத் தெரியும்.

❀ ❀ ❀



## ஸ்ரீ அரவிந்த சுடர்

கட்டுப்பாடாகச் சாதித்து, சோம்பலில் ஓய்வெடுத்துக் கொள்வது மனிதச் செயல். இல்லையேல் மன நிம்மதி பெற அழிச்சாட்டியத்தை நாடுவான்.

***பூரணத்தில் சாதிப்பவர்***

***பூரணத்தில் நிம்மதியான ஓய்வுபெற முடியும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிறப்பான திறன், பூரணச் சமர்ப்பணம், காலத்தைக் கணத்தில் காண்பது, ஆழத்தை நாடுதல்போன்ற யோக முறைகள் அனந்தனின் அளவு கடந்த சக்தியை, கண்டமான மனித வாழ்வில் கொணர்ந்து கண்டத்தை அகண்டமாக்க முயல்கிறது.

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

136. *இனாமாக வருகிறதுஎன்றால் எதையும் கேட்பான்.*

✡ **இறைவன் அழைப்பை ஏற்பவரில்லை.**

137. *நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை.*

✡ **அன்பர் ஒருவர் செய்வது அனைத்துலகம் பெறுவது.**

138. *தாமரை இலைத் தண்ணீர்போல.*

✡ **வாழ்வால் பாதிக்கப்படாமல் வாழவேண்டும்.**

139. *நீர்க்குமிழி.*

✡ **சமர்ப்பணமாகாத சித்தி நீர்க் குமிழியாகும் - நிரந்தரமான நீர்க்குமிழி.**

140. *பெண்புத்தி பின்புத்தி.*

✡ **ஆன்மா முன்னேயறியும். மனம் அறியும் பின்னே.**

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தாழ்ந்தவரின் தலைமையை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை சமூகத்திற்கும் அதன் தலைவர்களுக்கும் இருந்தால் புரட்சி வெற்றியடையும்.



# பகுதியான அறிவு முழுமை பெற ஞானமாவது

கர்மயோகி

பிரச்சினையென எழும்பொழுது அது பல பகுதிகளின் தொகுப்பாகும். ஒரு வீடு கஷ்ட நிலைமையிலிருந்தால் பணம் பற்றாக்குறையாகும், வேலை செய்ய விருப்பமில்லாமலிருக்கும், வீடு அசுத்தமானதாகும், தவறான பலனை நாடும் மனப்பான்மையிருக்கும், விரயம் செய்வார்கள், எந்த ஒழுங்குமிருக்காதுஎன பல கோணத்தில் பல பகுதிகளாகப் பிரச்சினை சேர்ந்திருப்பது வழக்கம். இந்தக் குடும்பம் வசதியாக மாறும் வழிகளைப் பல வகைகளாகக் கூறலாம். கீழ்க்கண்டது அவற்றுள் ஒன்று. குடும்பத்தில் ஒருவர் பிரச்சினைக்குத் தாம் எப்படிக் காரணம்என சிந்தித்து புரிந்து கொண்டால், புரியும் அளவுக்குப் பிரச்சினை குறையும், விலகும். பிரச்சினைக்கு 7 பகுதிகளிலிருந்தால், அவர் தம் கண்ணோட்டத்தில் ஒவ்வொரு பகுதியாகப் புரிந்துகொள்ள முயன்றால், அப்பகுதி வலுவிழந்து விலகும். 7 பகுதிகளும் அப்படி விலகியபின்னும் மேலும் செய்யக்கூடியதுண்டு.

❇ முழுமை பகுதிகளின் தொகுப்பைவிடப் பெரியதுஎன்பது ஒரு சட்டம். ஒவ்வொரு பகுதி புரியும்பொழுது பிரச்சினைகள் வழி விட ஆரம்பிக்கும். அல்லது ஓரளவு தீர்வு தரும். 7 பகுதிகளும் விலகுவது நிலைமையை அடுத்த உயர்ந்த கட்டத்திற்கு உயர்த்தும்.

❇ தீர்வுகாண முனைபவர் தம் கோணத்தில் பிரச்சினையை புரிந்து கொண்டால் அவை விலகி, குடும்பத்தை அடுத்த உயர்ந்த கட்டத்திற்கு அழைத்துப் போய் வசதியளிக்கும்.

*Pride and Prejudice*இல் Mr.பென்னட், Mrs.பென்னட், ஜேன், எலிசபெத், மேரி, கிட்டி, லிடியா, பிங்லி, டார்சி, காலின்ஸ், ஷார்லோட், லேடி காதரீன், ஆன், சர் லூகாஸ், லேடி லூகாஸ் என்பவர் பாத்திரங்கள். மேற்சொன்ன சட்டம் அனைவருக்கும்

பொருந்தும். எலிசபெத் நோக்கில் கதையை விமர்சனம் செய்தால் மேற்சொன்ன சட்டத்தை விளக்கலாம். அதேபோல் அத்தனைப் பாத்திரங்கள் நோக்கிலும் கூறினால் கதையில் மூலம், சாரம், பிரெஞ்சுப் புரட்சியின் சிறுஉருவம், சமூகத்தின் பரிணாம மாறுதல், ஆன்மீகஞானோதயம் எழும்.

பென்னட் பெண்களுக்கு, தலைக்கு ஆயிரம் பவுன் சீதனமுண்டு. அதிலிருந்து ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 50 பவுன் வருமானம் வரும். திருமண மார்க்கட்டில் பெண் ஆண்டிற்கு 500 பவுன் வருமானமுள்ளவளானால் அவளுக்கு கிராக்கியிருக்கும். இப்பெண்கள் அழகிகள். அழகிற்காக மட்டும் திருமணமாகாது. இந்த விமர்சனத்தை எலிசபெத் கண்ணோட்டத்தில் எழுதுகிறேன். அவளுக்கு தமக்கை ஜேன் மீது பிரியம். தன் திருமணத்தைவிட ஜேனுக்குத் திருமணமாக அவள் நெகிழ்ந்து உருகுகிறாள். உருக்கம் பலன்தரும் வகையாக பிங்லி வருகிறான். ஜேன்மீது ஆசைப்படுகிறான். அனைவரும் திருமணமாகும்என நினைக்கின்றனர். அதே சமயம் விக்காம் வருகிறான். எலிசபெத்திடம் டார்சியைப் பற்றிப் பொய் சொல்கிறான். அவன் கூறும் பொய்யை அவள் நம்பிவிட்டாள். தான் கேட்ட செய்தியைத் தமக்கையிடம் கூறும்பொழுது நெதர்பீல்டிலிருந்து பிங்லி இலண்டன் போவதாகவும், மீண்டும் வரப்போவதில்லைஎனக் கடிதம் வருகிறது. பிங்லி வாய்ப்பு, விக்காம் தடை. எலிசபெத் மனம் விக்காமை நாடுவது ஜேன் பிங்லியை மணக்கத் தடை. இத்தடை உருவாக பல கோணங்களில் பல காரணங்கள் உள்ளன. அவை,

(1) எலிசபெத் விக்காம் பொய்யை நம்புவது.

(2) தாயார் கணவனை அனுப்பி பிங்லியைப் பார்க்கச் சொல்வது. நாமே போனால் காரியம் முடியாது. பென்னட் மனைவியின் பேச்சுக்கு இணங்குவது.

(3) காலின்ஸ் எலிசபெத்தை மணக்க விரும்புவது. தாயார் அதை ஆதரிப்பது.

(4) தாயாருக்கு லிடியா திருமணம் நெஞ்சில் ஆழத்திலிருப்பதால் அது முடியும்வரை எலிசபெத் எண்ணம் நிறைவேறாது.

(5) டார்சி எலிசபெத்தை எவருமறியாமல் விரும்புகிறான். மனச்சாட்சி இடம்தரவில்லை. மனம் அலைச்சல்படுகிறது.

(6) காலின்ஸ் லாங்பார்ன் எஸ்டேட்டிற்கு உரிமையுடையவன். அவன் வீட்டிற்கு வந்தபொழுது தகப்பனாரும் பெண்களும் அவனைக் கேலி செய்கிறார்கள். அவன் அதை அறியவில்லை.

(7) டார்சியின் சித்தி மகள் டார்சியை மணக்க இருப்பது பெருந் தடை.

(8) பிங்லி டார்சிக்குக் கட்டுப்பட்டவன். டார்சியின்தடை விலகாமல் பிங்லி திருமணம் பூர்த்தியாகாது.

(9) டார்சி பிங்லி ஜேனை மணப்பதை எதிர்க்கிறான்.

(10) பிங்லியின் உடன்பிறந்தவரும் எதிர்க்கிறார்கள்.

எலிசபெத் தனி மனுஷியானாலும் மேற்சொன்ன பிரச்சினைகள் பகுதியானாலும், பிரச்சினைகள் அவளைப் பொறுத்தவரை புரியுமானால், விலகும்என்பது சட்டம். நடந்தது என்ன?

எலிசபெத் சித்தி வீட்டில் விக்காமைச் சந்திக்கிறாள். அவன் அழகன், இனிமையாகப் பேசுகிறான், இதமாகப் பழகுகிறான். எந்தச் சிறுவிஷயத்தை எடுத்துப்பேசினாலும் அலங்காரமாக, அணியாரமாகப் பேசுகிறான். அவன் பேசுவதை நாளெல்லாம் கேட்கலாம். சத்தியத்தின் உருவமாகத் தென்படுகிறான். டார்சியுடன் சிறு வயதிலிருந்து பழகியவன். அவன் ஆர்வமாக எலிசபெத்திடம் வருகிறான். டார்சியைப் பற்றிப் பொய்யும் புனைசுருட்டும் கூறுகிறான். எலிசபெத் நம்புகிறாள். அவள் மனம் நிறைகிறது. வீட்டுக்கு வருகிறாள். ஜேனிடம் தான் டார்சியைப்பற்றி அறிந்தவற்றைக் கூறிக்கொண்டிருக்கும்பொழுது கரோலின்கடிதம் வருகிறது. அவர்கள் அனைவரும் இலண்டன் போகின்றனர். இனி வரமாட்டார்கள்என்பது விவரம். *எலிசபெத் மனமாரப் பொய்யை ஏற்று மகிழ ஆரம்பித்தவுடன் ஜேன் திருமண வாய்ப்பு நிரந்தரமாக அழிகிறது.* எலிசபெத் பதைக்கிறாள், படபடக்கிறாள். தானே காரணம் என அறியமாட்டாள்.

டார்சியும், காரலினும் சதித் திட்டமிட்டனர். எலிசபெத்திற்கு அது தெரிகிறது. ஜேனுக்குத் தெரியவில்லை. பிங்லி வந்தவுடன் Mrs.பென்னட், ‘‘போ, போ, போய்ப் பார். அறிமுகம் செய்துகொள்’’ எனக் கணவனை அனுப்புகிறார். ஜேனுக்கு அழைப்பு வந்தவுடன், ‘‘குதிரைமேல் போ, மழை வருகிறது. நனைந்து ஜுரம் வந்தால் 1 வாரம் அங்கேயே இரு. பிங்லியை விடாதே, பிடித்துக்கொள்’’ என மகளுக்குக் கூறுகிறார். நாமே போனால் கூடி வாராது. அவசரப்பட்டால் தள்ளிப்போகும்என தாயார் அறியார். தகப்பனாருக்கு எலிசபெத் திருமணம் முக்கியம். தாயாருக்கு லிடியா திருமணம் முக்கியம். முக்கியமானவர் மனம் சாதிக்கும். ஜேன் திருமணம் நடைபெற இத்தனையும் கடந்துவர வேண்டும்என எவருக்கும் தெரியவில்லை. காலின்ஸ் வந்தவுடன் தாயார் எலிசபெத்தை, ‘‘அவர் சொல்வதைக் கேள். மணமுடிக்க ஒத்துக்கொள். எஸ்டேட் கிடைக்கும்’’ என்கிறார். இவர் நினைவு நடக்காது. உள்ளதையும் அழிக்கும்எனத் தாயாருக்குத் தெரியாது. காலின்ஸ் ஷார்லோட்டை மணக்கிறார். ஷார்லோட் தன் இடத்திற்கு எலிசபெத்தை அழைக்கிறார். மனமில்லாமல் எலிசபெத் போகிறாள். அங்கு டார்சியைச் சந்திக்கிறாள். அவன் நெஞ்சு காதலால் வெடிக்கிறது. ஆர்வமாக வந்து, ‘‘நீ எவ்வளவு மட்டமானவளானாலும் என் மனம் கட்டுப்பாட்டிலில்லை, அவசியம் என்னை மணக்க வேண்டும்’’ என உருக்கமாகப் பேசும்பொழுது இவள் குடும்பத்தை மட்டமாக, அநாகரீகமான சொற்களால் குறைத்துப் பேசுகிறான். எலிசபெத் அவன் ஜேனைப் பாழாக்கியவன், விக்காமின் பரம எதிரிஎன்று கூறி, ‘‘உன்னைப் போன்ற மனிதனை எந்த நாளிலும் மணக்க நான் சம்மதிக்கமாட்டேன்’’ என்கிறாள். நீண்ட விவரமான காரசாரமான கடிதம் எழுதுகிறான். அதில்,

- ✯ ஜேனுக்கு பிங்லி மீது ஆசையில்லை.
- ✯ உனது தாயார் மட்டுமரியாதையற்ற வாயாடி.
- ✯ உன் தங்கைகள் வெட்கம் கெட்ட பெண்கள்.
- ✯ நீயும் ஜேனும் அழகாகப் பழகுகிறீர்கள்.
- ✯ விக்காம் ஊதாரி, தறுதலை, பொய்யன், £3,000 பணம் பெற்றான். என் தங்கை வாழ்வைப் பாழாக்க முயன்றான்என எழுதியிருந்தான்.



பெரும்மனப்போராட்டத்திற்குப்பின் உண்மையை அவள் மனம் ஏற்கிறது. உணர்ச்சி ஏற்கவில்லை. விக்காம் தன்னைவிட்டுப் பணம் வந்த மற்றொரு பெண்ணை பச்சையாக நாடியபொழுதும் அவன் மீது பாசம் குறையவில்லை. வீடு திரும்புகிறாள். விக்காம் சாயம் வெளுக்கிறது. மனம் அவனை விட்டு அகல்கிறது. நெஞ்சம் மாறவில்லை. பெம்பர்லிக்கு அழைப்பு வருகிறது. பெம்பர்லியில் டார்சி உன்னதமானவன், விக்காம் தறுதலைஎனக் கேள்விப்படுகிறாள். டார்சி அன்பொழுகப் பழகுகிறான். அவனை ஏற்க மனம் துடிக்கிறது. லிடியா ஓடிப்போகிறாள். பெண் ஓடிப்போனால் அதற்குப்பின் மற்ற பெண்கட்கு என்னவழி? மனம் உடைகிறாள். இவளை ஏற்க வந்த டார்சி அசம்பாவிதத்தை அறிந்து ஸ்தம்பித்துப் போகிறான். அவளைக் கண்டுபிடித்து, அவனுக்குப் பணம்கொடுத்து மிரட்டி திருமணம் செய்து வைக்கிறான். மணமக்கள் வீடு திரும்புகின்றனர். வெட்கமேயில்லை. மீண்டும் பச்சையான பொய்யைக் கூறும்பொழுது எலிசபெத் தடுத்து பேச்சை நிறுத்துகிறாள்.

- ✯ எலிசபெத் மனம் உண்மையை ஏற்கிறது.
- ✯ ஜேன் இலண்டனுக்குப் போனபொழுது காரலின் சொன்ன பொய்யை அறிந்து மனம் மாறுகிறாள்.
- ✯ தாயார் தானெடுத்த முயற்சியெல்லாம் வீண் போயிற்றுஎன அறிகிறாள்.
- ✯ அவன் மனம் உறுத்தும் திருமணம் நடந்து அந்தத் தடை விலகுகிறது.
- ✯ பொறுப்பற்ற தகப்பனார் தம் தவற்றை உணர்ந்து பொறுப்பை ஏற்கிறார்.
- ✯ மீண்டும் பிங்லி வந்தபொழுது பழைய தவற்றைச் செய்ய மறுக்கிறார்.
- ✯ டார்சி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு பிங்லியிடம் மன்னிப்புக் கேட்கிறான்.

✯ *எலிசபெத் மனம் விக்காமை விட்டகன்று தாயாரின் அவலத்தையும் தங்கைகளின் ஆர்ப்பாட்டத்தையும் கண்டு உண்மையை ஏற்றுக்கொண்டவுடன், ஜேன் திருமணத்தில் எழுந்த எல்லாத் தடைகளும் விலகி திருமணம் முடிகிறது.* லிடியாவின் கேவலத்தை டார்சியிடம் மனம்விட்டுப் பேசியதால் அவள் திருமணமும் முடிகிறது. மனம் வேறு, நெஞ்சு வேறு. மனம் புரிந்துகொண்டதை நெஞ்சு முழுவதும் ஏற்காது. எலிசபெத் டார்சியை ஏற்கத் தயாராகிறாள். அவனுக்காக அபரிமிதமான சொத்துள்ள முறைப்பெண் காத்திருக்கிறாள். லேடி காதரீனுக்கு அந்த நினைவுள்ளவரை எலிசபெத் மணம் நடக்குமா? இல்லாத வதந்தியைக் கேட்டு லேடி காதரீன் வந்து புயலாகக் கொந்தளிக்கிறாள். எலிசபெத்தைத் திட்டுகிறாள். டார்சிக்கு அறிவுறுத்துகிறாள். அதன்மூலம் இதுவரை தயங்கிய டார்சி எலிசபெத் மனம் அறிந்து வந்து அவளை மணக்கிறான். எலிசபெத் செய்ததென்ன?

✯ *படிப்படியாக அவள் மனம் உண்மையை ஏற்றது. படிப்படியாக ஏற்பட்ட தடைகள் விலகின. முடிவு என்ன?*

£2,000 சம்பாதிக்கும் பென்னட் பெண்கள் £100 சம்பாதிக்கும் ஆபீசர்களை சிரமப்பட்டுப் பிடிக்க முயலும்பொழுது £4,000 பெறும் வரனும் £10,000 பெறும் நிலச்சுவான்தாரும் விரும்பி வந்து வேண்டிக் கேட்டு மகிழ்ந்து மணம் முடித்தனர்.

✳ 7 அல்லது 8 அல்லது 9 குறைகள் விலகும்பொழுது அவற்றிற்குரிய சிறு நன்மைகள் வருகின்றன.

✳ முடிவான 9ஆம் குறையும் 10ஆம் குறையும் விலகும்பொழுது வாய்ப்பு முழுமைபெறுகிறது. உள்ள நிலை உயர்ந்து மலர்கிறது என்ற சட்டம் தன் உண்மையைக் கூறுகிறது.

✳ மனம் மாறினால் தடை விலகும்.

✳ முழுவதும் மாறினால் பேர் உயர்வு பேரருளாக உதயமாகும்.

❀ ❀ ❀





## P.110 Only when we have climbed above ourselves

### நம்மை நாம் கடந்தபின்

✡ **பிரம்மம் நம் யாத்திரையைச் சந்திக்கிறது**

✡ **காலத்தைக் கடந்த சத்தியத்துடன் நம்மை இணைக்கிறது**

✡ **விதிக்கப்பட்ட கதியைச் சொல்லாக எழுப்புகிறது**

✡ **அது தெய்வமான செயல், மரணமறியாத எண்ணம்**

✡ **ஒளியின்கதிர் மூளையைப் பெருமையாகச் சூழ்கிறது**

✡ **க்ஷணமழியும் பாதையில் இழிந்துவரும் போக்கு**

✡ **காலத்தைக் கடந்த ரூபங்கள் வருகின்றன**

✡ **அவை அறிவு பெறும் விருந்து, இதயம் அழைக்கும் உறவு**

✡ **அழியும் சுருக்கத்தை அவை போற்றிப் பாராட்டும்**

✡ **விடுதலைக்குரிய மின்னல் அரிதாக எழுந்தது**

✡ **திருஷ்டியின் மென்மை கொண்ட ஐயம் பிடித்துக்கொண்டது**

✡ **இங்குமங்கும் புவியில் நாமென்னஎன்ற பிம்பம்**

✡ **நம்மைத் தொட்டுத் தொடர்கிறது**

✡ **பூமியின் குறையே நாம் வாழ்ந்து வளரும் லோகம்**

✡ **இயற்கையெனும் கண்ணாடி நம் உண்மை சொரூபத்தைக் காட்டுவதில்லை**

✡ **அதன் பெருமை மறைவில் உறைகிறது**

✡ **புவியின் ஐயம் நம் பிதிராஜ்ஜியத்தை மறக்கிறது**

✡ **தூரத்து ஜோதி சொந்த சூரியனாகும்**

✡ **இன்று வரும் பலம் அன்று நட்புள்ள சக்தியாகும்**

✡ சொல்லைக் கடந்தது குரலெழுப்பும் இரகஸ்யம்

✡ ஜடமெனும் திரையில் அழியாதது எரிந்து சாம்பலாகும்

✡ அழியுமுடல் தெய்வத்தின் ஆடையாகி மாற்றமுறும்

✡ ஆத்மபெருமை நம் அழியாத ஊற்று

✡ முடிவில்லாத காலத்தில் அது நம் முடிவாகும்

✡ அறிவையும் புலனையும் அளவுகடந்து கடந்த பெரியது

✡ நம்மைச் சூழ்ந்து ஊடுருவுகிறது

✡ எழுச்சி பெற்ற ஏகன் நம்மை ஆடையாகச் சூழ்கிறான்

✡ வாழ்வின் அம்சங்கள் சூட்சுமமாகச் சந்திக்கின்றன

✡ சிருஷ்டியனைத்தும் ஒரே தொடர்சங்கிலி

✡ மூடிய வாழ்வில் நம்மைத் தனித்து நிறுத்தவில்லை

✡ ஜடமான சக்தி இருளான வேகமாக ஓடுகிறது

✡ அறிய முடியாத பிரம்மம் அங்கு அரியாசனம் பெறுகிறது

✡ ஆத்மசெயலில் வாழ்வு புனிதமான ஓட்டம்

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உலகில் அவதாரமாக நடமாடிய பொழுதும், மனிதனை தீவிரமாக நெருங்க அன்னை விரும்பினால் தோல்வி முதலியவற்றால் நெருங்குவதே அன்னை வழக்கம்.

***உடனிருந்தபொழுதும் அன்னை முறை மாறவில்லை.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**973) கட்டுப்பாடான முறைகள் உள்ளுறை அர்த்தமின்றி இருந்தால் கடுமை ஏற்படும்.**

***உள்ளும் புறமும் முறையாக இருந்தால் கேள்வியில்லை. புறமிருந்து உள்ளே காலியானால் தோற்றத்தைக் காப்பாற்ற கடுமை வேண்டும்.***

- ★ எடுத்த பெரிய பட்டத்தில் வெளியில் சொல்ல வெட்கப்படும் விவரங்களிருந்தால் எவரும் அந்த விஷயத்தைத் தொடாமல் பார்த்துக்கொள்வது கடுமை.
- ★ பிறப்பு, வளர்ப்பு சரியில்லாவிட்டாலும் அதே கடுமை எழும்.
- ★ மத ஸ்தாபனங்களில் நம்பிக்கை குறைவாக இருந்து, ஸ்தாபனம் பெரியதானால் கட்டுப்பாடின்றி ஸ்தாபனத்தைக் காப்பாற்ற முடியும்.

சாந்தி நிகேதனில் ரவிந்திரநாத் தாகூர் விஸ்வ பாரதி நிறுவினார். இந்திரா காந்தி அங்கு படித்தவர். வகுப்புக்கு வர வேண்டும், குறித்த வகுப்பிலிருக்கவேண்டும்என்பது போன்ற கட்டுப்பாடுகள் அங்கு அதிகம் அமுலிலிருக்காது. பிள்ளைகள் மரத்தின் மீது உட்கார்ந்தும் படிப்பார்கள்.

*ஸ்தாபனம் பெரியது. ஜீவனுள்ளது. கட்டுப்பாட்டால் இயங்குவதில்லை. அதனால் கட்டுப்பாடு குறைகிறது.*

சம்மர்ஹில்என்ற ஆங்கிலப் பள்ளியும் அது போல் உலகப் பிரசித்தி பெற்றது. மாணவர்கள் என்ன செய்கிறார்கள்என எவருக்கும் தெரியாது. அங்கு பயின்ற மாணவர்கட்குப் பரிட்சையும் இல்லை. பெரும்பாலான மாணவர்கள் வாழ்க்கையில் பேர் அளவுக்கு உயர்ந்தனர்.

எதேச்சாதிகார நாடுகளில் சர்க்காரைக் குறைசொன்னால் ஜெயிலுக்குப் போகவேண்டியிருக்கும். கட்டுப்பாடு மிக அதிகம். கேள்வியில்லாமல் சுடப்படுவார்கள். அந்த நாட்டில் வாழ்க்கைத் தரம் சுதந்திரமான நாடுகளில் உள்ளதுபோல உயராது.

அன்புள்ள இடத்தில் அதிகாரத்திற்கு வேலையில்லை. அன்பில்லாத நேரம் அதிகாரம் தேவை.

நிலம் எரு போட்டுப் பயிரானால், பூச்சி விழாது. உரம் போட்டு பயிரிட்டால் பூச்சி விழும். பூச்சி மருந்து அடிக்க வேண்டும். அது கடுமையான முறை.

அன்பாக வளரும் குழந்தை செல்லமாக வளர்பவனில்லை. ஒழுங்காகப் படிப்பான். அன்பில்லாத இடத்துப் பையன் படிக்க-மாட்டான். கடுமைப்படுத்த வேண்டியிருக்கும்.

சரக்கு உயர்வானதானால் விளம்பரம் தேவையில்லை. விளம்பரம் கடுமைக்குரியது. மலிவான சரக்குக்குத் தேவை.

கடுமையான விரதங்கள் வளராதஆத்மாவுக்கு அவசியம்.
வளர்ந்த ஆத்மாவுக்கு ஆசனம், பிராணாயாமம், ஜபம் தேவையில்லை.

தண்டனை சிறியவர்க்கு.
பெரியவர்க்குத் தண்டனை தேவைப்படுவதில்லை.
மூலம் இருந்தால் முறை தேவையில்லை.
முறை கடுமைக்குரியது.

❀ ❀ ❀

**974) போட்டிக்கு நிற்கும் எதிரிகள் உதாசீனம் செய்தால் அல்லது எதிர்த்தால் வெற்றி நிச்சயம்.**

☆ உலகில் எதிரியென்று எவருமில்லை. அனைவரும் ஆத்மாவில் துணைவரே. எவர் எதுசெய்தாலும் அது எவருக்கும் நல்லதாகவே அமையும்.



☆ அகந்தையின் பார்வைக்கு எதிரி, ஆத்மதிருஷ்டிக்கு நண்பன்.

☆ இங்கிலாந்து இந்தியாவை அடிமையாக்கியது, நாடு ஒன்றுபட உதவியது.

☆ உலகப்போர், உலகத்தில் போரை அழிக்க அடிகோலியது.

☆ ஹிட்லர் உலகை ஆள முனைந்ததால், உலகை ஒன்றுபடுத்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஏற்பட்டது.

☆ பிரெஞ்சுப் புரட்சியில் ஜமீன்தார்கள் பெருவாரியாகக் கொல்லப்பட்டது உலகில் எதேச்சாதிகாரம் அழியவும் சமத்துவம் நிலவவும் உதவியது.

☆ இந்தியாவில் உணவுப் பஞ்சத்தால் 10 கோடி மக்கள் உயிரிழக்கும் நெருக்கடி 1960இல் ஏற்பட்டதால் பசுமைப்புரட்சி வந்தது.

☆ அக்பர் சிறுவயதில் படிக்க மறுத்து அடம்பிடித்துத் தற்குறியானதால் அரசியல் மேதையாகி, புதிய மதம் ஸ்தாபித்து, உலகிலேயே பெரிய சாம்ராஜ்யத்தை ஆண்டார்.

☆ கிராமத்தில் பாங்குக் கடனை அறிமுகப்படுத்த 1969இல் எல்லா ஏற்பாடுகளும் செய்தபொழுது கோவாப்பரேட்டிவ் சொஸைட்டித் தலைவர் எதிர்த்தார்.

**இவற்றை ஏற்பாடு செய்த அன்பர் இதை எதிர்ப்பாகக் கொள்ளாமல், இது திட்டம் வெற்றி பெறுவதை உறுதிப்படுத்துகிறதுஎன்றார்.**

★ திட்டம் ரூ.25,000இல் தீட்டியது 63,000 ரூபாயாக மாறியது.

★ அந்த ஆண்டு பெருமழை பெய்ததால் வானம் பார்த்த பயிர் அபரிமிதமாகப் பயன் பெற்றது.
அத்துடன் பூச்சி விழுவதை மழை தடுத்தது.

★ அளவு கடந்து, அபரிமிதமான மணிலா மகசூல்.
மகசூல் அதிகமானால் விலை குறையும்.
அந்த ஆண்டு முதலாண்டு உச்சக்கட்ட விலையில் மார்க்கட் ஆரம்பித்து, விலை இரு மடங்காகியது.

- ✭ கடன் பெற்றவர் அனைவரும் வசூல் செய்யாமல் கடனைத் திருப்பிக் கொடுத்தனர்.
- ✭ அடுத்த ஆண்டு கடன் 63,000த்திலிருந்து 8 இலட்சம் ஆயிற்று.
- ✭ இந்த உதாரணம் அகில இந்தியபாங்க் சேர்மன் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, விவசாயக்கடன் ரூ.150 கோடி 2000 கிராமங்கட்கு வழங்கப்பட்டது.
- ✭ இன்று விவசாயக்கடன் 2½ இலட்சம் கோடி.

✩ எதிரி உதவமாட்டான், அழிக்க நினைப்பான். அவன் சமூகத்தில் எதிரியாக இருந்தாலும் ஆத்மாவில் உறவினன். அந்தக் கட்டத்தில் எவரும் எவர்க்கும் உபத்திரவம் தரமுடியாது.

**அது உபத்திரவமில்லாத லோகம்.**

***மனிதனை ஆத்மாவாகக் கருதுவது ஆன்மீக திருஷ்டி.***

***அவர்கட்கு எதிரியின் எதிர்ப்பு, ஆண்டவனின் அருள்வெளிப்பாடாகத் தெரியும்.***

❀ ❀ ❀

## 975) எதுவும் அருளின் செயலே. நாமுள்ள நிலை சில சமயங்களில் அருளை ஆபத்தாகப் பெறுகிறது.

***எதுவும் அருளின்செயலே.***

★ ஹோட்டலில் உள்ள அத்தனைப் பொருள்களும் சாப்பிடக் கூடியவை.
நீரிழிவு உள்ளவருக்கு இனிப்பு உதவாது.
வயிற்றில் புண் உள்ளவருக்கு, காரம் வயிரெறியும்.
உப்பில்லாத பத்தியம் உப்புப் போட்ட பண்டங்களால் பாதிக்கப்படும்.



- ✲ *கோளாறு சாப்பாட்டிலில்லை.*
- ✲ *சாப்பிடும் மனிதனின் உடல்நலக் குறைவில் கோளாறு உள்ளது.*

★ ஒரு நூலகத்திலுள்ள எந்த நூலும் அறிவுக் களஞ்சியம்.
தமிழ் படிக்கத் தெரியாதவனுக்குத் தமிழ்ப்புத்தகங்கள் பயன்படா.
இன்ஜீனியருக்கு சிலப்பதிகாரம் புரியாது.
டாக்டருக்கு இன்ஜீனியர் புத்தகம் தேவைப்படாது.
தமிழ்இலக்கியம் படித்த இன்ஜீனியருக்கு சிலப்பதிகாரம் பொக்கிஷம்.

★ ஊரிலும் உலகிலும் உள்ள வசதிகள் ஏராளம், அறிவு அளவு கடந்தது.
நமக்கு அதெல்லாம் தேவையில்லை.
நம்முடைய தேவையை நிர்ணயிப்பது நம்வாழ்வு.
நமக்குத் தேவையில்லாத பொருள்கள் தவறானவைஎனக் கருத முடியாது.
நம் வீட்டில் திருமணம் நடக்கும் நாளில் சுற்றுலாத் திட்டம் வந்தால் சுற்றுலாத் திட்டம் தவறாகாது. நமக்கு அந்தச் சமயம் பயன்படாது.
பரிட்சைக்குப் படிக்கும் பையனுக்கு டெலிவிஷன் தொந்திரவானால் தொந்திரவு டெலிவிஷனிலும் இல்லை, பரிட்சையிலுமில்லை, பையனிடமுமில்லை. சந்தர்ப்பம் அப்படி. அதனால் டெலிவிஷன் தவறானது, பரிட்சை தவறானது, பையன் தவறானவன்என்று செய்யும் முடிவு பொருந்தாது.
டெலிவிஷன் பார்த்து, படிக்காமல், பெயிலாவது நம் செயலில் உள்ள குறை.
பொருள்களில், சந்தர்ப்பத்திலுள்ள குறையாகாது.

★ நம் வாழ்வு பெருகும்பொழுது நேற்று தேவைப்படாதது, இன்று தேவைப்படும்.
சிறு குழந்தைக்கு விளையாட்டுச் சாமான் பயன்படும், புத்தகம் பயன்படாது.

படிக்க ஆரம்பித்தபின் புத்தகம் பயன்படும்.
தெய்வீகவாழ்வு உலகிலுள்ள அனைத்தையும் நேரம் வரும்பொழுது அனுபவிக்கக்கூடியது.
வாழ்வு எளிமையானபொழுது எட்டாத வசதிகள் உலகுக்குத் தேவைப்படாதவைஎனக் கூறமுடியாது.
வாழ்க்கைத்தரம் உயரும்பொழுது நேற்று அறியாத பொருள்கள் இன்று அவசியமாகின்றன.

- ★ நிலத்திற்குப் போடும் உரம் விவசாயிக்குத் தேவை.
அது நமக்கு நேரடியாகத் தேவையில்லாவிட்டாலும், நமக்கு உரம் உற்பத்தி செய்யும் சாப்பாடு தேவை.
- ★ அருள் நமக்கு ஆபத்தாக, தொந்தரவாகத்தெரியும் நேரம் உண்டு.
வீடு எரியும்பொழுது நெருப்பு ஆபத்தாக இருக்கிறது.
அதனால் நெருப்பு வேண்டாதது அன்று, ஆபத்தானது அன்று.
அறியாமை வாழ்விற்கு அருள் ஆபத்து, வாழ்வுக்கன்று.
- ★ நாமறிந்து அத்தனைக் குறைகளும், கோளாறுகளும், ஒரு சிலருக்கு இன்றியமையாதவை.
விஷம் உயிரை எடுக்கும்.
சிலவியாதிகட்கு விஷம் வியாதியைப் போக்கி, உயிரைக் கொடுக்கும்.
- ★ வாழ்வில் அருள்தவிர வேறேதும் இல்லை. குப்புற விழுந்தாலும் அதுவும் அருளே. அருளைப் புரிந்துகொள்ளும் அறிவை நாம் பெறவேண்டும்.

❀ ❀ ❀

*தொடரும்....*

**ஜீவிய மணி**

**தன்னைமட்டும் விரும்புவது தாராள மனப்பான்மை.**
**பகுதி தன்னை மேன்மையாகக் காணும்.**



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## (32) முடிவான பலன் முதலிலேயே கிடைப்பது

மனிதவாழ்வு அனுபவத்தால், திறமையால் சாதிக்கிறது. அந்தச் சாதனை அவனுடைய குடும்ப சந்தர்ப்பத்திற்குட்பட்டது. அடுத்த கட்டத்தில் ஊர், உலக சந்தர்ப்பத்திற்குட்பட்டது. அதனால்

*மனித சாதனை அவனது சமூகத்திற்குட்பட்டது.*

பெரிய சாதனையைச் செய்பவர் அனைவரும் சமூகத்தைக் கடந்து சாதிப்பவரே.

- ★ அவர்களும் அவர்கள் நம்பிக்கைக்குட்பட்டவரே.
- ★ மனித நம்பிக்கையில் தலையாயது கர்மம்.
- ★ இந்தியமரபு கர்மத்தைக் கடக்க முடியாதுஎன்கிறது.
- ★ தெய்வ நம்பிக்கையுள்ளவரைக் கர்மம் கட்டுப்படுத்தாது.

*அவர்கள் பெருஞ்சாதனையாளர்.*

1947இல் சுதந்திரம் வந்தது - ஆனால் ஆட்சி 1946 செப்டம்பரில் நம் கைக்கு வந்துவிட்டது. அன்று தலையாய பிரச்சினை உணவு உற்பத்தி. 1943இல் வங்காளப் பஞ்சம் வந்து போனவுடன், நாட்டுஆட்சி நம் கைக்கு வந்தபின் பஞ்சம் அன்னியராட்சியால் வந்ததுஎனக் கூற முடியாது. எனவே உணவு இலாக்கா பிரதம மந்திரிக்கு அடுத்த முக்கியத்துவம் பெற்றது. பெருந்தலைவர்கள் அதை நடத்தினர். அவர்களுள் ராஜேந்திர பிரசாத், ஜெகஜீவன் ராம், ரவி அகமத் கித்வாய், ராஜாஜி ஆகியோரிருந்தனர். எவராலும் உணவு பற்றாக்குறையைத் தீர்க்க முடியவில்லை. நெருக்கடி 1964 வரை நீடித்தது. 1964இல் சுப்ரமணியம் வந்தார். அவருக்கு நாட்டில்

நம்பிக்கையுண்டு. பாரதமாதா காப்பாற்றுவாள்என்று நம்பினார். அது தெய்வ நம்பிக்கை. பசுமைப்புரட்சி வந்து பற்றாக்குறையை அடியோடு நீக்கியது. நாட்டின் திறமை பலன் பெற்றது. திறமை மீதுள்ள இருளான கர்மம் - இந்தியா பஞ்சத்திலடிபட்ட நாடுஎன்ற கர்மம் - விலகி,

- தெய்வ நம்பிக்கை கர்மத்தை விலக்கி, திறமைக்குரிய பலனை அதற்குரிய காலத்தில் தரும். அது அருள்.
- அதற்கடுத்த கட்டம் பேரருள்.
- மனிதன் தன் திறமையை நம்பாமல் ஆண்டவனை நம்பினால் திறமை விலகும். அருள் பேரருளாகும்.
- திறமையை நாம் நம்புவதால் திறமை செயல்பட்டுப் பலன் தருகிறது. திறமை பலன்தர காலம் தேவை.
- திறமை விலகினால், காலம் விலகும். அதே நேரம் பலன் வரும்.

*முடிவான பலன் முதலிலேயே வரும்.*

அன்பர்கள் வாழ்வில் இது அடிக்கடி நடக்கும். அது யோக வாயிலாகும். 1989இல் சர்வதேசக்கமிஷன் முதற்கூட்டம் இத்தாலியில் நடந்தது. அணுஆயுத ஒழிப்புக்காக ஏற்பட்டது இக்கமிஷன். கூட்டம் ஆரம்பிக்கும் 10 நாளைக்குமுன் வல்லரசுகள் ஒழிப்பை ஏற்றுக் கொண்டன. பிராண்ட்கமிஷன் பிரசித்தி பெற்றது. அதன் டைரக்டர் நம் கமிஷன்மெம்பர். முதற் கூட்டம் முடிந்த அன்று அவர், ''பிராண்ட் கமிஷனில் 1 வருஷத்தில் சாதித்ததை நீங்கள் ஒரே கூட்டத்தில் முடித்துவிட்டீர்கள்'' என்றார்.

- கர்மம் விலகுவது அருள், திறமை விலகுவது பேரருள்.
- பேரருள் செயல்படுவது யோகவாயில்.
- நாம் அதை முடிவான பலன் முதலிலேயே பெறுவது என்கிறோம்.

*தொடரும்.....*





# திட்டு = தங்கச் சங்கிலி

இல. சுந்தரி

''தீபா வந்துவிட்டாளா?'' என்று கேட்டவண்ணம் மாடியில் தம் அறையிலிருந்து வெளியே படியில் இறங்கியவண்ணம் வாயில் முன்னிடத்திலமர்ந்திருக்கும் கூர்க்காவைப் பார்த்தார் குருமூர்த்தி.

உடனே எழுந்திருந்து, ''அம்மா இப்பத்தான் உள்ளே போனாங்க'' என்றான் கூர்க்கா.

தம் கைக்கெடிகாரத்தில் சரியாக மணி 10 ஆவதைப் பார்த்து தீபாவின் காலந்தவறாமையை எண்ணிப் புன்னகைத்துக் கொண்டார்.

இந்தப் பங்களாவீட்டின் சொந்தக்காரர் மேற்படி குருமூர்த்தி சார். பெரிய பதவி வகித்து சமீபத்தில்தான் பணிவோய்வு பெற்றவர். பணியில் இருந்தபோதும் சரி, இப்போதும் சரி, 'சார் இருக்காங்களா?' என்று கேட்டவண்ணம் பலரும் இவரை நாடி வருவது வழக்கம். நல்ல பண்பாளர், செல்வர். உலகியல் அறிவு, தாராள மனப்பான்மை, நாணயம் இவற்றால் சிறந்தவர்என்பதால் யாரேனும் இவரை நாடி வந்தவண்ணமிருப்பர். எல்லோரும் 'சார், சார்' என்றழைத்து இவர் பெயரே 'சார்' ஆயிற்று. வீட்டு மனிதர்களும் இவரைக் குறிப்பிட 'சார்' என்ற சொல்லையே பயன்படுத்தினர்.

ஓய்வு பெற்றபின்னும் பலதுறை அறிவுகொண்ட இவர், பல நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு சேவையாகப் பணியாற்றி வந்தார். கூட்டங்களுக்குத் தலைமை தாங்கவும், சிறப்புரை ஆற்றவும் பலரும் அழைப்பர். இவரும் தட்டாமல் ஏற்றுக்கொள்வார். நாளடைவில் வெளியே செல்லும் வாய்ப்பு அதிகரித்தது. வீட்டில் இருந்தபடியே செய்யும் வேலையும் அதிகரித்தது. எனவே, திறமையான உதவியாளர் இருந்தால் வீட்டிலிருந்து செய்யும் வேலைகளை அவர் பொறுப்பில் விட்டுவிட்டு வெளி வேலைகளைத் தாம் செய்யலாம்என்று நினைத்தார்.

தம் நெருங்கிய நண்பர் ஒருவரிடம், ஓரளவு படித்து, கம்ப்யூட்டர்

பயிற்சியுள்ள நம்பகமான யாரேனும் இருந்தால் தம்மிடம் அழைத்து வரச் சொன்னார்.

நண்பருக்கு, ரெங்காவின் மகள் தீபாவின் நினைவு வந்தது.

ரெங்கா ஒரு சமையற்காரர். 40 வயதைக் கடந்தவர். ஒரே மகள் தீபாவின் 2வது வயதில் மனைவியை இழந்தவர். மறுமணம் புரிந்து கொண்டால் மகளுக்குத் தன்னன்பை முழுமையாய்த் தர முடியாதுபோகும் என்றஞ்சி தாமே தாயாய் அவளைப் பாசத்துடன் வளர்த்தார்.

தீபா செல்லப் பெண்ணாய் வளர்ந்ததால் பிடிவாதம், மறுத்துப் பேசுவது, எதிர்த்துப் பேசுவது எல்லாம் உண்டு. அவள் அறிவையும் திறமையையும் கண்டு மகிழ்ந்த ரெங்கா அவள் குறைகளைப் பொருட்படுத்துவதில்லை. படிப்பிலும், பல கலைகளைக் கற்றுக் கொள்வதிலும் ஆர்வம் காட்டிய அவளுக்குச் சமையல் செய்வது மட்டும் பிடிக்காது. அப்பாவிற்குச் சிறுஉதவி செய்யக்கூட சமையலறைக்கு வரமாட்டாள். ''நான் உன்னைப் போல் சமையல்காரி ஆகமாட்டேன். நன்றாகப் படித்துக் கலெக்டராவேன்'' என்பாள். தன் மகள் கலெக்டராவது அவருக்குச் சந்தோஷம்தான். ஆனால் அதற்காகச் சமையல் தெரியாதிருப்பது சரியன்று. சமையற்காரனை வேலை வாங்கவும் சமையல் தெரிந்திருக்க வேண்டும். தன் குடும்பத்திற்கு, குழந்தைக்குத் தன்னன்பைக் கொடுக்க சமையல் தேவைப்படும் ஒரு நேரம் வரும். அப்போது சகல கலையும் கற்று, சமையல் தெரியாதது பெரிய குறையாய்த் தோன்றும். அவர் நயமாக எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவள் கேட்கவில்லை. அவள் உயர்ந்த ஆர்வங்கள் அவருக்குப் புரிந்தது. என்றாலும் சமையல் செய்வது பற்றிய அவள் தாழ்ந்த அபிப்பிராயம் தவறுஎன்று எடுத்துக் கூற முடியாமல் தவித்தார். அவர் ஓர் அன்னையன்பர்என்பதால் தியான மையச் சொற்பொழிவுகளில் மௌனத்தின் சக்தி (silent will power) என்பதுபற்றிக் கேட்டதை இதற்குப் பயன்படுத்துவதுஎன்ற முடிவுக்கு வந்து, அது பற்றிப் பேசுவதில்லைஎன உறுதி கொண்டார்.

*(நாம் எண்ணிய கருத்தை வெளியிட வேண்டிய காலத்தில் மனத்தைக் கட்டுப்படுத்தி, அதை வெளியிடாமலிருந்தால் அந்தக் கருத்திற்கு ஒரு சக்தி வந்து நாம் வெளியிட்டுப் பெறும் பலனைவிட வெளியிடாமலிருக்கும்போது*



*கிடைக்கும் பலன் அதிகம். அந்த சக்தி மனத்தின் சக்தி.*

*ஒரு மனிதன் உணர்வுபூர்வமாகத் தன் மனத்தில் தோன்றிய கருத்தை வெளியிட மறுத்தால் அந்த எண்ணம் வேறொருவர் மூலம் அவருடைய நலனுக்காக அவருக்குச் சந்தோஷம் தரும்வகையில் வெளிப்படுகிறது.*

*ஸ்ரீ கர்மயோகி.)*

தீபா செல்லப் பெண்ணானதால் தன் விருப்பம்போல் நடந்து கொள்வாள். அறிவு, திறமை, சுறுசுறுப்பு ஏராளம் என்றாலும் தானோர் அதிகாரியாய் வரவேண்டுமேதவிர, அடுப்பங்கரை பெண்ணாகக் கூடாதுஎன்ற பிடிவாதமிருந்தது. தந்தைக்கு வசதி இல்லாததால் +2 முடித்து, அஞ்சல் வழிக் கல்வியாக பி.காம். கடைசி செமஸ்டர் முடித்துவிட்டாள். ரிசல்ட் வந்து மேலும் படிக்க வேண்டும் என்று ஆவல். கணிணியின் அருமை தெரியுமாதலால் அதன் பயிற்சி வகுப்புகளுக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

இந்த நிலையில்தான் சார் வீட்டில் அவருக்கு உதவியாளராக வரும்படி அழைப்பு வந்தது. வந்து அழைத்தவர் சாரைப் பற்றிக் கூறியவை தீபாவுக்குப் பிடித்தது.

''தீபா, சார் ரொம்ப நல்லவர். உன்னைப் போல் திறமைசாலிகளை அவர் மதித்து நடத்துவார். மேலும், அவருக்கு 3 ஆண்மக்களைத்தவிர பெண் குழந்தை இல்லாததால் உன்னைத் தம் மகள்போல் நடத்துவார். பெரிய இடம். உனக்குத் தனி ஆபீஸ் ரூம். கம்ப்யூட்டர் நெட் கனக்ஷன் உண்டு. உனக்கே தனியாய் லாப்டாப் வாங்கித் தருவார். மேலே படிக்க ஆசைப்பட்டால் அவரே உன்னைப் படிக்க வைப்பார்'' என்றெல்லாம் கூறி அழைத்துப் போனார். அவர் கூறியது யாவுமே உண்மைதான்.

முதல் பார்வையிலேயே சாருக்குத் தீபாவைப் பிடித்துவிட்டது. எந்தத் தேர்வுமில்லாமல் எடுத்த எடுப்பிலேயே ஒரு குறிப்புக் கொடுத்துக் கடிதம் தயாரிக்கச் சொல்லிவிட்டார். அவளும் அவர் கொடுத்த குறிப்புகளைக் கொண்டு அழகான முறையில் கடிதம் தயாரித்துக் கொடுத்தாள். அவள் திறமை, சுறுசுறுப்பு, உற்சாகம் அவரை வெகுவாகக் கவர்ந்தது. ''வெரிகுட் தீபா. இன்றுமுதல் நீதான் என் பி.ஏ., என் மகள் எல்லாம்'' என்றதுடன், தம் தாயாரிடம் அவளை அழைத்துப் போய், ''அம்மா! உனக்கொரு பெயர்த்தி வந்திருக்கிறாள்,

பார்'' என்றார். ''இவள் பெயர் தீபா. என் அலுவலக வேலைக்கு உதவியாய் வந்திருக்கிறாள். நீ அவளை அடுப்பங்கரைக்குக் கூப்பிடக் கூடாது. நான் அவளைப் படிக்க வைத்துக் கலெக்டராக்கப் போகிறேன்'' என்றார். தம் பிள்ளைகளையும் அழைத்து, ''இன்று முதல் இவள்தான் என் பி.ஏ. உங்களுக்குத் தங்கை'' என்றார். எல்லோரும் அவளை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர்.

சமையற்காரர், வேலைக்காரர் யாவரையும் அழைத்து, 'சின்னம்மா' என்று அறிமுகப்படுத்தினார்.

காலை 10 மணிக்கு வர வேண்டும். மாலை 4 மணிக்கு வீட்டிற்குப் போகலாம். சாருக்கும் அவர் பிள்ளைகளுக்கும் மாடியில் அறைகள் இருந்தன. கீழே சமையலறை, சாப்பாட்டுக் கூடம், பூஜையறை, தீபாவிற்கு ஆபீஸ்ரூம். காலையில் இவள் வருமுன் பிள்ளைகள் வேலைக்குப் போய்விடுவார்கள். மதிய உணவிற்கு எல்லோரும் ஒன்று கூடுவார்கள். அவள் தன் அப்பா அன்புடன் தரும் சாப்பாட்டை எடுத்து வருவாள். சார், 'இங்கேயே சாப்பிடு' என்று கூறியதை நயமாக மறுத்துவிட்டாள்.

சார் வெளியே கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு, பேச்சும் அவளே தயாரித்துக் கொடுப்பாள். தவறாது கடிதங்களுக்குப் பதில்களை ஈமெயில், மற்றும் கடிதம் மூலம் உடனுக்குடன் அனுப்புவாள். சார், வேலை குறைவாகக் கொடுக்கும் நாட்களில் நிறைய புத்தகம் படிப்பாள். சார் வீட்டில் பெரிய நூல்நிலையமே இருந்தது. அதை அவள் நன்கு பயன்படுத்துவது சாருக்கு சந்தோஷம். சில நாட்கள் தம்முடன் கூட்டங்களுக்கும் அழைத்துச் செல்வார். ஒரு முறை தமக்குப் பதில் அவளையே பேசவைத்தார். குறுகிய காலத்தில் அவளை பிரபலப்படுத்திவிட்டார்.

வீட்டிலும் எல்லோர் மனதையும் கவர்ந்துவிட்டாள். சார் அவளிடம் காட்டும் அன்பைப் பார்த்து வேலைக்காரர்களும் மிகுந்த மரியாதையுடன் நடத்தினர். சாரின் மனைவி இறந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. பாட்டிதான் அந்த வீட்டின் ஒரே பெண்மணி.

திடீரென்று ஒரு நாள் சமையற்காரரின் தாய் இறந்துவிட்டதால் தான் வேலைக்கு வர பதினாறு நாட்களாகும்என்று பணிவுடன் கடிதம் அனுப்பியிருந்தார். மாற்று ஏற்பாடு எதுவும் இல்லை.



பாட்டியைத்தவிர மற்றவர்கள் ஆண்கள்என்பதால் காலைச் சிற்றுண்டிக்கு வெளியே சென்றுவிடுவார்கள். பாட்டி காலையில் கேழ்வரகு கஞ்சி குடிப்பதால் பிரச்சனையில்லை. மதிய உணவை கேரியரில் எடுத்து வந்து எல்லோரும் உண்ண ஏற்பாடு. பாட்டிக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதனால் வீட்டில் தானே சமைப்பது என்று முடிவு செய்தாள். ஆனால் தள்ளாமை காரணமாய் முடியவில்லை. 11 மணிக்கு 'டீ' டைம் தீபாவுக்கு இடைவேளை. தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருப்பாள். சார் பெரும்பாலும் வெளியே போய்விடுவார். பிள்ளைகளும் அலுவலகம் சென்றுவிடுவார்கள். பாட்டியைத்தவிர கீழ்வீட்டில் யாரும் இருக்கமாட்டார்கள்.

அந்தநேரம் பார்த்து பாட்டி தீபாவை அழைத்தார். தீபாவும் வந்தாள்.

''தீபா, பாட்டி உன்னிடம் ஒன்று கேட்கப்போகிறேன்'' என்றாள் பாட்டி.

''கேளுங்கள் பாட்டி, சொல்கிறேன். கடிதம் ஏதாவது எழுத வேண்டுமா? கதை படித்துச் சொல்ல வேண்டுமா?'' என்று உற்சாகமாய்க் கேட்டாள்.

பாட்டிக்கு மிகவும் தயக்கமாயிருந்தது. ''அதெல்லாமில்லை தீபா. சமையற்காரனில்லாமல் பேரன்கள் கடை சாப்பாடு தருவிக்கிறார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. நானே சமைக்கலாம் என்றால் தள்ளாமையாய் இருக்கிறது. எனக்குமட்டும் ஓசைப்படாமல் ஒரு வாய் சமைத்துத் தருகிறாயா?'' என்றாள் பாட்டி.

தீபாவின் உற்சாகம் வடிந்துவிட்டது. பதிலேதும் கூறவில்லை. மௌனமாய் நின்றாள்.

''வேலைக்கு வந்த உன்னை சமைக்கச் சொல்கிறேனே என்று நினைக்கிறாயா? உன்னை என் பேத்தியாய் நினைத்துதான் கேட்கிறேன்'' என்று தணிவாகப் பேசினாள் பாட்டி.

ஒன்றும் பேசாது தலைகுனிந்து நின்றாள் தீபா. அவள் கண்கள் கலங்கிவிட்டிருந்தன.

''பரவாயில்லை தீபா. நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் பாட்டி.

இந்த வீட்டிற்கு வந்த நாளாய், வந்ததும், 'சாப்பிட்டாயா தீபா?

இல்லையென்றால் என்னுடன் சாப்பிடலாம் வா' என்பார் அன்பாக. 4 மணிக்கு வீட்டிற்குப் புறப்படும்போது அன்று ஏதேனும் இனிப்பு செய்திருந்தால் கையில் கொடுத்தனுப்புவாள். தோட்டத்து மல்லிகைப் பூவைத் தொடுத்து வைத்து, தலையில் சூட்டிவிடுவாள். அந்த அன்பான பாட்டிக்கு உதவி செய்ய முடியாத நிலை தீபாவிற்குச் சங்கடமாயிருந்தது.

''அதில்லை பாட்டி. எனக்குச் சமைக்கத் தெரியாது'' என்று மிகுந்த அவமான உணர்வுடன் கூறினாள்.

இத்தனைநேரம் தணிவாய்ப் பேசிய பாட்டி திடீரென்று காரமானாள்.

''என்ன சொல்கிறாய் நீ? ஒரு வயதுப் பெண்ணிற்கு சமைக்கத் தெரியாதா? எவ்வளவுதான் செல்லம் கொடுத்தாலும் பெண் குழந்தைக்குச் சமையல் பயிற்ற வேண்டாமா? உன் அப்பா சிறந்த சமையற் கலைஞர் என்று சார் சொன்னாரே?'' என்றாள்.

''அப்பாதான் வீட்டில் எல்லாம் செய்வார். இதுவரை நான் எதுவும் செய்ததில்லை'' என்று குற்றவுணர்வுடன் கூறினாள்.

''அப்பா செல்லம் கொடுத்திருக்கிறார். இதே அவரிடத்தில் உன் அம்மா இருந்திருந்தால் கண்டித்து சமையல் சொல்லிக் கொடுத்திருப்பாள். பிறந்த வீட்டில் எப்படியும் இருக்கலாம். போகும் வீட்டில் என்னைப் போல ஒரு பாட்டியிருந்து சமைக்கச் சொன்னால் என்ன செய்வாய்? தீபா எனக்காகச் சொல்லவில்லை, உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன். எந்த ஒன்று நமக்குத் தெரியவில்லை என்றாலும் அந்தவொன்றிற்கு நாம் பிறர்க்கு அடிமையாய்த்தானிருக்க வேண்டி வரும்'' என்று சொல்லிக் கொண்டேயிருக்கும்போது, விடுவிடென்று தன் அறைக்குச் சென்று கைப்பையை எடுத்துக்கொண்டு, அறையைப் பூட்டி, சாவியை அதனிடத்தில் பொருத்திவிட்டு, சொல்லாமலேயே போய்விட்டாள்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# இராகு காலம்

இராகு காலம், எமகண்டம், அஷ்டமி, நவமி, ஆயில்யம், மகம், ஆகியவை கெட்ட வேளைகள். திருடன், கொள்ளைக்காரன், பிக் பாக்கட்போன்றவர் சமூக விரோதிகள். காலரா, அம்மை, கான்சர், Aids போன்றவை பொல்லாத வியாதிகள். இலஞ்சம் வாங்குபவர், ஏமாற்றுபவர்கள், எதிர்கட்சிக்காரனிடம் பணம்வாங்கும் வக்கீல் உடனிருந்து கெடுப்பவர்கள். வெகுளித்தனம், இரகஸ்யத்தைக் காப்பாற்ற முடியாதது, அசம்பாவிதமாகப் பேசும் பழக்கம், பொறாமை, அவசரம், ஆகியவை மட்டமான குணங்கள், கெட்ட குணங்கள்.

*அன்பர் அனுபவம் என்ன?*

❈ அன்னையை ஆர்வம் மிகுந்து நெஞ்சு நெகிழ்ந்து நினைக்கும் நாட்கள் அன்பர் வாழ்வில் எழுவதுண்டு. அந்த நேரம் அவருக்குப் பெரிய பொறுப்பான வேலைகள் அமையும்.

*அவர் அம்மனநிலையில் வேலை செய்ய ஆரம்பித்தால் மேற்சொன்ன பட்டியலில் உள்ள அவ்வளவும் தானே விலகி சுப முகூர்த்தம், அமிர்த வேளை, நாணயமான ஆபீசர், சாதகமான சட்டம் தானே அமையும்.*

அன்பர் திருவுருமாற்றத்தைத் தேடி வெற்றி பெறும் மனநிலை உள்ளவரானால் வேலை இராகு காலத்தில் அமையும். இராகு காலம் திருவுருமாறி அமிர்த வேளையாகச் செயல்படும். அப்படிச் செயல்பட்டால் நாம் மேற்கொண்ட செயல் அடுத்த உயர் கட்டத்தில் பூர்த்தியாகும். சிறுநீரகக்கல் வலி தருவதால் ஆப்பரேஷனுக்குப் போனவர் "புது லாசர் டிரீட்மெண்ட் வந்திருக்கிறது, ஆப்பரேஷன் தேவையில்லை" என்று கேள்விப்பட்டார். கிளார்க் உத்தியோகத்திற்கு விண்ணப்பிக்க மனதிலிருந்து இராகு காலத்தை எடுத்தவர்க்கு இராகு காலத்தில் இன்டர்வியூ வந்தது. அவரை ஆபீசராக நியமித்தனர்.

❈ அன்பர்க்கு விஷயம் வேளையில், மனிதரில், குணத்திலில்லை.

***அவர் மனத்திலிருக்கிறது.***
***மனம் அன்னையில் மட்டுமிருந்தால்***
***செயல் அற்புதமாக அமையும்.***

❀❀❀

# சாவித்திரி

பகவான் ஆயுள் முழுவதும் எழுதிய நூல் *சாவித்திரி*. 1914 முதல் 1922 வரை ஆர்யாவில் எழுதிய 5 நூல்களில் *The Life Divine*, *The Synthesis of Yoga*வும் இரு நூல்கள்.

| | | |
|---|---|---|
| ***The Life Divine*** | - | தத்துவம். அவருடைய *Magnum Opus* எனக் கருதப்படுவது. அனைவரும் போற்றுவது. |
| ***The Synthesis of Yoga*** | - | யோகப் பயிற்சி. தத்துவமில்லை, செய்முறை எளிதில் புரியும். |
| ***Savitri*** | - | காவியம். 1950இல் எழுதி முடித்தார். |

24,000 வரிகள் கொண்டது.

எல்லா வரிகளையும் overmind levelக்கு உயர்த்த முயன்றேன் என்றார்.

*சாவித்திரியைப்* படித்தால் யோகம் பூர்த்தியாகும்.

*The Life Divine* சொல்வதைப் புரிந்து செயல்படவேண்டும்.

*Synthesis* சொல்வதை அப்படியே செய்யலாம்.

*Savitri*யைப் படித்தால் போதும்.

முதல் நூல் அறிவுக்குரியது, அடுத்தது செயலுக்குரியது, *சாவித்திரி* சித்தி தருவது.

*The Life Divine* சரணாகதியை விளக்குகிறது.

*Synthesis* சரணாகதியை எப்படிச் செய்வதெனக் கூறுகிறது.

**மனம் அமைதியாக சாவித்திரியில் சரணாகதியை வர்ணிக்கும் வரியைப் படித்தால், ஆன்மாவில் சரணாகதி சித்திக்கும்.**

அதனால் *சாவித்திரியே* முக்கிய நூல்என *Agenda*வில் எழுதுகிறார்.

❀❀❀

March 2010 Jiviyam 15 Malar 11
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11


புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191